Registerd as a News Paper பக்கங்கள் 04 விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆனி 7 [21-06-98] திங்கட்கிழமை ஓசை 123

Y.M.C.A.

## கல்லீரல் அழற்சி நோயினால் வருடம் 15 இலட்சம் பேர் உயிரிழப்பு

கல்லீரல் அழற்சி நோயினால் ஒவ்வொரு வருடமும் 15 இலட்சம் பேர் உயிரிழப்பதாக உலக சுகாதார ஸ்தாபனம் செய்தி வெளியிட்டுள்ளது. ஈரலைத் தாக்கும் ஹெப்பட்டைட்டிஸ் ''வி'' எனப்படும் இக் கல்வீரல் அழற்சி நோய் இலகுவில் குணப்படுத்த முடியாத ஒரு நோயாகக் கருதப்படுகிறது. உலகனைத்தும் 30 கோடி மக்களுக்காவது இந் நோய்க் கிருமிகள் இருக்கலாம் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இவர்களில் முக்கால் வீதமானோர் சீனா, தைவான் மற்றும் தென் கிழக்கு ஆசிய நாடுகளைச் சேர்ந்தவர்களே என்று தெரிய வருகிறது. இந்நோய் ஈரல் புற்று நோய் மற்றும் ஈரல் அரிப்பு எனப்படும் சிரோஸிஸ் நோய்களையும் ஏற்படுத்தவல்லது. இந் நோய் ஒவ்வொரு வருடமும் ஏறத்தாழ 15 இலட்சம் பேரின் உயிரைப் பறிக்கிறது என்று கணக்கிடப்பட்டுள்ளது. உலக சுகாதார நிறுவனம் 1991ஆம் ஆண்டில் இந் நோயால் பாதிக்கப்பட்டவர்களின் கணக்கை (4ஆம் பக்கம் பார்க்க)

# விடுதலைப் புலிகளின் கோரிக்கையை ஜனாதிபதியிடம் எடுத்து விளக்குவேன்

## பிரிகேடியர் வீரசேகரா தெரிவிப்பு

[வடமராட்சி]

''விடுதலைப் புலிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளின் விபரங்களையும் நான் இன்று கொழும்பு சென்று சேர்ந்ததும் ஜனாதிபதி டி.பி. விஜயதுங்காவிடம் நேரில் தெரிவிப்பேன்". இவ்வாறு யாழ்ப்பாணத்தில் இருதினங்கள் தங்கியிருந்து விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திய புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் பிரிகேடியர் ஆனந்த வீரசேகரா தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திவிட்டு நேற்றுக்காலை கொழும்பு திரும்பிய பிரிகேடியர் தெரிவிக்கையில், விடுதலைப் புலிகளுடன் கைதிகள் விடுவிப்புத் தொடர்பாக நடைபெற்ற பேச்சுவார்த்தை விபரங்களை இன்றே ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டுவருவேன் எனவும் தெரிவித்தார்.

பிரிகேடியர் ஆனந்தவீரசேகரா நேற்றுக்காலை 11மணியளவில் கொழும்புக்குத் திரும்பிச் செல்கையில் பருத்தித்துறை இறங்குதுறையில் வடமராட்சி செய்தியாளர் கேட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

யுத்தக் கைதிகளின் பெற்றோரும் தங்கள் பிள்ளைகளை விடுவிக்குமாறு எனக்கு நெருக்குதல் கொடுத்ததையும் ஜனாதிபதிக்கு நான் தெரியவைப்பேன் எனவும் மேலும் அவர் தெரிவித்தார்.

பிரிகேடியரை ஏற்றிச் செல்வதற்காகக் காங்கேசன்துறையில் தரித்து நின்ற 'நரோமா' கப்பல் 11 மணியளவில் பருத்தித்துறை இறங்குதுறைக்கு வந்தது. சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ். வதிவிடப் பிரதிநிதி இவரைக் கப்பலுக்குக் கூட்டிச்சென்றார். இவருடன் யாழ். அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகரும் கூடவே சென்றார். இவர்கள் இருவரும் காங்கேசன் துறைக்குச்சென்று அங்கிருந்து விமானம் மூலம் கொழும்பைச் சென்றடைந்தனர். (யோ)

## லெப். மருதவாணனுக்கு இன்று மக்கள் அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவில் நேற்றுமுன்தினமிரவு எதிர்பாராத விதமாக இடம்பெற்ற நேரடி மோதலில் லெப்டினன்ட் மருதவாணன் / விஜித் (சாமித்தம்பி புண்ணியமூர்த்தி, சந்திவெளி, முறக்கொட்டாஞ்சேனை, மட்டக்களப்பு) எனும் விடுதலைப் புலிகள் போராளி வீரச்சாவு அடைந்தார்.

இவரின் வித்துடல் இன்று காலை 8.00 மணிக்கு நீர்வேலி நகர் மாவீரர் மண்டபத்திலிருந்து நாவாந்துறை சென். மேரிஸ் சனசமூக நிலையத்திற்கு அணிவகுப்பு மரியாதைகளுடன் எடுத்துச் செல்லப்பட்டு மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்படும். பின்னர் அந்த அஞ்சலிக்கூட்டம் நடைபெற்று 10மணிக்கு அங்கிருந்துகொக்குவில் மேற்கு சனசமூக நிலையத்திற்கு அணிவகுப்பு மரியாதையுடன் எடுத்துச் செல்லப்பட்டு மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு அஞ்சலிக் கூட்டம் நடைபெற்று 12மணிக்கு அணிவகுப்பு மரியாதை (4ஆம் பக்கம் பார்க்க)

## 1700 பீப்பா மண்ணெய் இன்று எடுத்து வரப்படும்

(வடமராட்சி)

பருத்தித்துறை துறைமுகத்திற்கு 'மத்ரண' என்ற சிறிய கப்பலில் 1700 மண்ணெண்ணெய் பரல்கள் எடுத்து வரப்படுகிறது இக்கப்பல் இன்று காலை துறைமுகத்தை வந்தடையும். இக் கப்பல் கடந்த இரு தினங்களாக காங்கேசன்துறை துறைமுகத்தில் தரித்து நின்றது பருத்தித்துறை துறைமுகத்திற்கென ஓர் இழுவைப்படகும் இக்கப்பல் மூலம் எடுத்து வரப்படுகிறது.

'குமண' கப்பலில் இம்முறை வந்த பொருள்களில் 2ஆயிரத்துக்கு மேற்பட்ட மெற்றிக் தொன் தனியாருக்கான சில்லறை பொருள்களே வந்துள்ளன. கூடுதலான சில்லறை பொருள்கள் இம்முறை எடுத்துவரப்பட்டதால் கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கும் வேலைகள் தாமதமடைந்து வருகின்றன.

கூட்டுப் படையினரால் இரண்டு வருடங்களாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த யாழ். இலங்கை செஞ்சிலுவைச் சங் [4ஆம் பக்கம் பார்க்க

கிளாலி - பூநகரி

## படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என யாழ். மாவட்ட வருவாய்ப் பொறுப்பாளர் தெரிவித்துள்ளார்.

### துப்பாக்கி திருட்டு

(கொழும்பு)

முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் அஷ்ரப்பின் மெய்காவலருக்கு வழங்கப்பட்டிருந்த கைத்துப்பாக்கி அவரது கொழும்பு இல்லத்திலிருந்து காணாமற் போய் விட்டதாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

## புலிகளை ஒடுக்குவதே எமது நோக்கமாகும்

ஹமில்டன் தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளை முழுமையாகச் செயலிழக்கச் செய்வதே எமது நோக்கம் என கூட்டுப்படைத் தலைமையக தளபதி ஜெனரல் ஹமில்டன் வனசிங்க தெரிவித்துள்ளார். கொழும்பில் பத்திரிகை ஒன்றிற்கு அவர் அளித்த பேட்டி ஒன்றிலேயே அவர்மேற்கண்டவாறு கூறினார்.

## கைதிகளை கூட்டிச்செல்லவே வீரசேகரா வந்தாராம்

சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு விளக்கம்

## 'சாதகமான பதிலானால் விரைவில் யாழ். வருவேன்'

[வடமராட்சி]

விடுதலைப் புலிகளின் நிபந்தனை குறித்து ஜனாதிபதி டி. பி. விஜயதுங்கா தெரிவிக் ... முகத்தில் வைத்து பிரிகேடியர் ஆனந்த வீரசேகரா எமது வடமராட்சி செய்தியாளரிடம் தெரிவித்தார்.

தன்னிச்சையாக முடிவுகளைத் தெரிவிக்கும் அதிகாரம் தனக்கு வழங்கப்படவில்லை எனவும் தெரிவித்தார்.

அடைந்தார்.

இவரின் வித்துடல் இன்று காலை 8.00 மணிக்கு நீகன் நகர் மாவீரர் மண்டபத்திலிருந்து நாவாந்துறை சென்.

பட்டு மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு அஞ்சலிக் கூட்டம் நடைபெற்று 12மணிக்கு அணிவகுப்பு மரியாதை

(4ஆம் பக்கம் பார்க்க)

## 1700 பீப்பா மண்ணெய் இன்று எடுத்து வரப்படும்

(வடமராட்சி)

பருத்தித்துறை துறைமுகத்திற்கு 'மத்ரண' என்ற சிறிய கப்பலில் 1700 மண்ணெண்ணெய் பரல்கள் எடுத்து வரப்படுகிறது இக்கப்பல் இன்று காலை துறைமுகத்தை வந்தடையும். இக் கப்பல் கடந்த இரு தினங்களாக காங்கேசன்துறை துறைமுகத்தில் தரித்து நின்றது பருத்தித்துறை துறைமுகத்திற்கென ஓர் இழுவைப்படகும் இக்கப்பல் மூலம் எடுத்து வரப்படுகிறது.

'குமண' கப்பலில் இம்முறை வந்த பொருள்களில் 2ஆயிரத்துக்கு மேற்பட்ட மெற்றிக் தொன் தனியாருக்கான சில்லறை பொருள்களே வந்துள்ளன. கூடுதலான சில்லறை பொருள்கள் இம்முறை எடுத்துவரப்பட்டதால் கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கும் வேலைகள் தாமதமடைந்து வருகின்றன.

கூட்டுப் படையினரால் இரண்டு வருடங்களாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த யாழ். இலங்கை செஞ்சிலுவைச் சங்

[4ஆம் பக்கம் பார்க்க

## வவுனியாவில் இடம் பெறும் அத்துமீறிய குடியேற்றம்

[வவுனியா]

வவுனியா செயலகத்தில் கடந்த வாரம் ஞாயிறன்று நடைபெற்ற உயர் அதிகாரிகள் மட்டத்திலான மாநாட்டில் கொழும்பிலிருந்து சென்ற எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த குழுவினர் வவுனியாவில் இடம் பெறும் அத்துமீறிய குடியேற்றம் தொடர்பாக அதிகாரிகளுக்குச் சுட்டிக் காட்டினர். இதற்கு உடனடித் தீர்வுகாணுமாறும் வற்புறுத்தினர்.

அத்துமீறிய குடியேற்றங்கள் காரணமாக இனமோதல் மேலும் இறுகிச் செல்கின்றது. இதன் பின்னணியில் இனங்களிடையே பதற்ற நிலையும் கொந்தளிப்பும் நீடிக்கின்றது. அநியாயமான உயிரிழப்புக்கள் ஏற்பட வழியேற்படுகின்றது என எதிரணியினர் சுட்டிக்காட்டியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## கொள்ளையில் ஈடுபட்ட 2 இராணுவத்தினர் கைது

(கொழும்பு)

அநுராதபுரம் மாவட்டம் தம்பேத்துகமவில், பல களவுகளில் ஈடுபட்டதாகக் கருதப்படும் இராணுவத்தை விட்டு விலகி ஓடிய இரு இராணுவத்தினரைப் பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்து கைது செய்தனர். இச்சம்பவம் நீர்கொழும்பில் இடம் பெற்றது.

காயப்பட்ட இராணுவத்தினர் இருவரும் சிகிச்சைக்காக அநுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் இவர்களுக்கு உதவியதாகக் கருதப்படும் இராணுவத்தை விட்டு விலகி ஓடிய மற்றொரு இராணுவத்தினரைப் பொலிசார் பயாகலப் பகுதியில் தேடி வருகின்றனர்.

கொள்ளுப்பிட்டியில் அண்மையில் 5 00,000ரூபா பணத்தையும் மற்றும் தம்பேத்துகம, கொழும்பு, நீர்கொழும்பு பகுதிகளில் மேலும் மூன்று களவுகளைச் செய்ததாகவும் இராணுவத்தினர் ஒப்புக் கொண்டுள்ளனர்.

வர் அஷ்ரப்பின் மெய்காவலருக்கு வழங்கப்பட்டிருந்த கைத்துப்பாக்கி அவரது கொழும்பு இல்லத்திலிருந்து காணாமற் போய் விட்டதாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திவிட்டு நேற்றுக்காலை கொழும்பு திரும்பிய பிரிகேடியர் தெரிவிக்கையில், விடுதலைப் புலிகளுடன் கைதிகள் விடுவிப்புத் தொடர்பாக நடைபெற்ற

## புலிகளை ஒருக்குவதே எமது நோக்கமாகும்

### ஹமில்டன் தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளை முழுமையாகச் செயலிழக்கச் செய்வதே எமது நோக்கம் என கூட்டுப்படைத் தலைமையக தளபதி ஜெனரல் ஹமில்டன் வனசிங்க தெரிவித்துள்ளார். கொழும்பில் பத்திரிகை ஒன்றிற்கு அவர் அளித்த பேட்டி ஒன்றிலேயே அவர்மேற்கண்டவாறு கூறினார்.

## கைதிகளை கூட்டிச்செல்லவே வீரசேகரா வந்தாராம்

### சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு விளக்கம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் தாம் தடுத்துவைத்துள்ள சிங்கள போர்க் கைதிகளை விடுவிக்க, பொருளாதாரத் தடையை நீக்குமாறு நிபந்தனை விதித்ததையடுத்து அது குறித்து அரசுடன் பேச்சுநடத்த பிரிகேடியர் வீரசேகரா கொழும்பு திரும்பியுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள்நேற்று தெரிவித்தன.

பிரிகேடியர் வீரசேகராகைதிகளை விடுவித்து தம்முடன் அழைத்துவர விசேட கப்பல் ஒன்றில் யாழ்ப்பாணம் சென்றதாகவும் கைதிகளை விடுவிக்க புலிகள் புதிய நிபந்தனையை விதித்ததையடுத்து அவர் அவசரமாக பலாலிசென்று விமான மூலம் கொழும்பு திரும்பியதாகவும் சிறிலங்கா வானொலி தெரிவித்தது.

## சேபால ஆட்டிக்கல இன்று கொழும்பு வருவார்

(லண்டன்)

பிரிட்டனில் சிறிலங்கா தூதுவராக இதுவரை இருந்துவந்த ஜெனரல் சேபால ஆட்டிகல நேற்றுமாலை லண்டனிலிருந்து கொழும்பு நோக்கி விமானம்மூலம் புறப்பட்டார்.

கொழும்பு வந்துசேரும் ஆட்டிகல பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பதவியையும், எயர் லங்கா பணிப்பாளர் சபைத்தலைவர் பதவியையும் ஏற்றுக்கொள்வார் எனக் கூறப்படுகிறது. எனினும் அவர் எப்போது தமது பொறுப்புகளை ஏற்றுக்கொள்வார் என்பது தெரிவிக்கப்படவில்லை.

## உண்ணாவிரதம் கைவிட அகதிகள் மறுப்பு

(கொழும்பு)

கொழும்பிலுள்ள அகதி முகாம்களை மூடிவிட அரசு தீர்மானித்ததையடுத்து அம்முகாம்களில் உண்ணாவிரதம் இருந்துவரும் மட்டக்களப்பு- அம்பாறை அகதிகளை சமூக சேவை ஆணையாளரும், அதிகாரிகளும் நேரில் சந்தித்தனர்.

உண்ணாவிரதத்தை கைவிடுமாறு அகதிகளை அவர்களின் சொந்த இடத்தில் குடியமர்த்த அரசு எல்லா உதவிகளையும் வழங்கும் எனவும் அதிகாரிகள் அகதிகளிடம் கூறிய போது 'நீங்கள் அமைச்சரை சந்தித்துப்பேசி நல்லதோர் முடிவுடன் வாருங்கள் அதுவரை நாம் உண்ணாவிரதத்தைத் தொடருவோம்'' என அகதிகள் தரப்பில்கூறப்பட்டது

இந்த இழுபறி நிலையை அடுத்து ஆணையாளரும், அதிகாரிகளும் அவ்விடத்தைவிட்டு சென்றதும் பொலிசார் அங்கு காவலில் நிறுத்தப்பட்டனர். அகதி முகாம்களுக்கு வெளியே ''அரசே எம்மை உடனடியாக அனுப்பவேண்டாம் எம்மை சாகடிக்கவேண்டாம்'' என்ற சுலோக அட்டைகள் தொங்கிக்கொண்டிருந்தன.

## மட்டு. கிராமங்கள் மீது விமானத் தாக்குதல்

(மட்டக்களப்பு)

சிறிலங்கா விமானப்படையின் நான்கு குண்டுவீச்சு விமானங்கள் மட்டக்களப்பு மாவட்டத்தின் சில பகுதிகளை வட்டமிட்டு நோட்டமிட்ட பின் மாலையில் அப்பகுதிகள் மீது பாரிய குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தின.

நேற்று முன்தினம் காலை 11 மணியளவில் சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான நான்கு சியாமாச்செட்டிரக குண்டு வீச்சு விமானங்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள வாகரை மற்றும் கட்டுமுறிவு ஆகிய பகுதிகளை பல தடவைகள் வட்டமிட்டுநோட்டமிட்டுச் சென்றன.

இதன் பின்னர் மீண்டும் மாலை 4மணியளவில் மேற்குறிப்பிட்ட இடங்களுக்கு உலங்கு வானூர்தி ஒன்றின் உதவியுடன் வந்த நான்கு குண்டு வீச்சு விமானங்களும் அப்பகுதிகளில் அடுத்தடுத்து ஏழு குண்டுகளை வீசிவிட்டுச் சென்றன.

பேச்சுவார்த்தை விபரங்களை இன்றே ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டுவருவேன் எனவும் தெரிவித்தார்.

பிரிகேடியர்ஆனந்தவீரசேகரா நேற்றுக்காலை 11மணியளவில் கொழும்புக்குத் திரும்பிச் செல்கையில் பருத்தித்துறை இறங்குதுறையில் வடமராட்சி செய்தியாளர் கேட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையிலேயேஇவ்வாறுதெரிவித்தார்.

யுத்தக் கைதிகளின் பெற்றோரும் தங்கள் பிள்ளைகளை விடுவிக்குமாறு எனக்கு நெருக்குதல் கொடுத்ததையும் ஜனாதிபதிக்கு நான் தெரியவைப்பேன் எனவும் மேலும் அவர் தெரிவித்தார்.

பிரிகேடியரை ஏற்றிச் செல்வதற்காகக் காங்கேசன்துறையில் தரித்து நின்ற 'நரோமா' கப்பல் 11 மணியளவில் பருத்தித்துறை இறங்குதுறைக்கு வந்தது. சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ். வதிவிடப் பிரதிநிதி இவரைக் கப்பலுக்குக் கூட்டிச்சென்றார். இவருடன் யாழ். அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகரும் கூடவே சென்றார். இவர்கள் இருவரும் காங்கேசன் துறைக்குச்சென்று அங்கிருந்து விமானம் மூலம் கொழும்பைச் சென்றடைந்தனர். (யோ)

## 'சாதகமான பதிலானால் விரைவில் யாழ். வருவேன்'

[வடமராட்சி]

விடுதலைப் புலிகளின் நிபந்தனை குறித்து ஜனாதிபதி டி. பி. விஜயதுங்கா தெரிவிக்கும்பதிலைப்பெற்றுக்கொண்டு ஓரிரு தினங்களில் மீண்டும் யாழ்ப்பாணம் வருவேன். இவ்வாறு கொழும்பு திரும்புகையில் பருத்தித்துறை துறைமுகத்தில் வைத்து பிரிகேடியர் ஆனந்த வீரசேகரா எமது வடமராட்சி செய்தியாளரிடம் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்; ஜனாதிபதியின் ஆணை பெற்றவராக நான் யாழ்ப்பாணம்வந்திருந்தாலும் இங்கு நடந்த பேச்சுவார்த்தைகளில் தன்னிச்சையாக முடிவுகளைத் தெரிவிக்கும் அதிகாரம் தனக்கு வழங்கப்படவில்லை எனவும் தெரிவித்தார்.

மேலும் அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் பதிலுடன் ஓரிரு தினங்களில் மீண்டும் யாழ்ப்பாணம் வருவேன் எனவும் அவர்தெரிவித்தார்.(யோ)

## மேலும் 2 தினங்கள் நீரருந்த உண்ணாவிரதிகள் முடிவு

(யாழ்ப்பணம்)

சாகும்வரை உண்ணாவிரதம் இருந்து வரும் சிங்கள போர்க் கைதிகள் மேலும் இரு தினங்களுக்கு நீரை அருந்தி உண்ணாவிரதத்தை தொடர விருப்பதாக அறிவித்துள்ளனர்

இவர்கள் முன்னர் ஏழு தினங்களுக்கு மட்டுமே நீரை அருந்தி உண்ணாவிரதம் இருக்க முடிவு செய்திருந்தனர். அதன்பின் நீர் அருந்தாது சாகும்வரை உண்ணாவிரதம் இருப்பது என முடிவுசெய்யப்பட்டிருந்தது.

ஆனால் பிரிகேடியர் ஆனந்த வீரசேகரா சிறைக் கைதிகளைச் சந்தித்துப் பேசியதை அடுத்தே மேலும் இரு தினங்களுக்கு நீர் அருந்தி உண்ணாவிரதம் இருக்க இவர்கள் முடிவு செய்தனர். இவ்விரு நாட்களினுள்ளும் அரசு புலிகளுடன் பேசி தமது விடுதலை தொடர்பாக சாதகமான நிலையை ஏற்படுத்த வேண்டும் என்றும் யுத்தக் கைதிகள் கேட்டுள்ளனர்.

### யுத்த நிறுத்தம், பேச்சுவார்த்தை

## நிரந்தர சமாதானத்திற்கு அதுவே அடிகோலும்

### சர்வமத குழு உறுப்பினர் தெரிவிப்பு

யுத்த நிறுத்தமும் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தையுமே சமாதானத்திற்கு அடிகோலும் அதனையே புலிகளும் விரும்புகின்றனர் என செடேக் சர்வமத சமாதானக் குழுவில் அங்கத்துவம் வகித்து யாழ்ப்பாணம் வந்திருந்த ஜோ. வில்லியம் என்பவர் பி. பி. ஸிக்கு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ''நாம் தீர்வுக்கான திட்டம் எதனையும் எடுத்துச் செல்லவில்லை. விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்தத்தையும் அதன்பின்னர் சமாதான பேச்சுவார்த்தை நடத்துவதையுமே விரும்புகின்றனர். யுத்த நிறுத்தமும் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தையுமே சமாதானத்துக்கு அடிகோலும் என்பது உண்மையே என ஜோ. வில்லியம் குறிப்பிட்டார்.

### கல்குடா பகுதியில்

## 125 சிங்கள குடும்பங்கள் மீளக்குடியமர்த்தல்

(மட்டக்களப்பு)

கல்குடாவிலிருந்து1990இல் வெளியேறிய 125 சிங்கள மீனவக் குடும்பங்கள் தமது முன்னைய இடங்களில் கடந்த வாரம் மீளக்குடியேற்றப்பட்டனர். இவர்களில் 54 குடும்

(4 ஆம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

**"நீமியா"**

மண்ணை வளமாக்கி. பயிர் பாதுகாப்பு வழங்கி, விளைச்சலைப் பெருக்கிடும் "நீமியா" பசளையாகவும், பூச்சி புழு கொல்லியாகவும் உதவுகிறது. புலோலி கமநலச் சேவை நிலையத்திலும் விற்பனையாகிறது "நீமியா". ஒரு கிலோ பக்கற் ரூபா 18/- மில்க்வைற். (சி-6865)

**கார் கசற் றேடியோக்களா? கடிகாரங்களா?**

மேற்குறிப்பிட்டவை யாதேனும் பழுதடைந்தால் அநுபவம் குறைந்தவர்களிடம் திருத்தக் கொடுத்து, பழுதையும் செலவையும் கூட்டிக் கொள்ளாமல் எம்மிடமே தந்து சிரமமின்றி குறைந்த செலவில் உத்தரவாதத்துடன் திருத்திப் பெற்றுக்கொள்ள எம்மை நாடுங்கள் டில்கா வாச் அன் றேடியோ வேக்ஸ் 284, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் கிளை: கண்டி வீதி. சாவகச்சேரி (சி-6849)

**விற்பனை முகவர் தேவை**

யாழ். மாநகரசபைக்கு உட்பட்ட பிரதேசத்தில் துவிச்சக்கரவண்டியில் சோடா, ஜாம் என்பன கமிசன் அடிப்படையில் விற்பனை செய்யக் கூடியவர்கள் தேவைப்படுகின்றனர். தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: உணவு பதனிடல்பகுதி, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம், முதன்மைச் செயலகம், தாவடி. (சி-6862)


**சீனி விநியோகம்**

வேலணை ப. நோ. கூ. சங்கம் தனது வாடிக்கையாளர்களுக்கு கட்டுப்பாட்டு விலைக்கு இரண்டு கிலோ சீனி அதன் மக்கள் கடைமூலம் வழங்கி வருகிறது. அத்துடன் தனது கிராமிய வங்கியில் ஒய்வூதியம் பெறுபவர்களுக்கான ஒய்வூதிய கொடுப்பனவு இரண்டு மாதங்களுக்கானது பணமாக வழங்கப்படுகிறது. (88)

**தையல் போட்டி**

ஆண்டு3 முதல் ஆண்டு8 வரையுள்ள வகுப்பு மாணவர்களுக்கான தையல போட்டி ஒன்று கொத்தணி ரீதியில் இன்று காலை 8-30 மணி தொடக்கம் நண்பகல் 12-00 மணிவரை வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

# யுத்தசெலவைகுறைக்குமாறு நிதி உதவுவோர் நிபந்தனை

(கொழும்பு)

உதவும் நாடுகள் வழங்கும் நிதி உதவியை யுத்தச் செலவினங்களுக்கு ஒதுக்குவதை நிறுத்தும்படியும், பொதுச் செலவுகளைக் குறைக்கும்படியும் உதவும் நாடுகள் சிறிலங்கா அரசைக் கேட்டுள்ளதாக திறைசேரி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

உதவும் நாடுகளின் இக்கருத்தை உலகவங்கிதிறைசேரி உயர் அதிகாரிகளுக்குத் தெரிவித்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

உலக வங்கி தென்னாசியா பிரிவுத் தலைவர் போல் இசுமான் தலைமையில் அண்மையில் கொழும்பு வந்த குழு ஒன்று இது குறித்து அரசிடம் பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் தெரியவருகிறது.

அத்துடன் கடந்த திங்களன்று இக்குழு ஜனாதிபதி டி. பி. விஜயதுங்காவைச் சந்தித்து உதவும் நாடுகளின் நிலைப்பாட்டை அவருக்குத் தெரியப்படுத்தியுள்ளது.

உதவும் நாடுகளின் கூட்டம் கடந்த வெள்ளியன்று பாரிஸ் நகரில் ஆரம்பமானது தெரிந்ததே.

8,50,900 மில்லியன் அமெரிக்க டொலரை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தலைமையில் பாரிஸ் சென்றுள்ள குழு உதவும் நாடுகளைக் கோரவுள்ளது. இத் தொகை கைக்கெட்டாவிடில் சிறிலங்காவில் அபிவிருத்தி வேலைகளில் பின்னடைவு ஏற்படும் என்று அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

கடந்த வருடம் உதவும் நாடுகள் வழங்கிய உதவியில் 60 வீதமும் கல்வி, தொலைத்தொடர்பு, சுகாதாரம் மற்றும் மின்வலு ஆகிய துறைகளின் அபிவிருத்திக்கு உபயோகிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது உதாரணமாக 2,500 மில்லியன் ரூபா மின்வலுக்குச் செலவு செய்யப்படவில்லை எனவும், கேள்விப் பத்திரம் கோருவதில் 18 மாத காலம் தாமதம் ஏற்பட்டதினாலேயே பெருந் தொகை பணம் செலவிடப்படவில்லை எனத் திறைசேரி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சென்றவருடம் இங்கிலாந்து பிரான்ஸ், நோர்வே ஆகியன சிறிலங்காவில் மனித உரிமைகள் மீறப்படுவதையிட்டு மேலதிகமான உதவிவழங்க மறுத்துவிட்டன.

# சிறிலங்கா பிரதமர் ரணில் புதுடில்லிக்கு விஜயம்

(டில்லி)

உதவி வழங்கும் நாடுகளின் குழுக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக பாரிஸ் சென்றிருந்த பிரதமர் ரணிலவிக்கிரமசிங்க இலங்கைதிருபும்வழியில் புதுடில்லிக்கு மூன்றுநாள் உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார்.

இன்றுதிங்கட்கிழமைபுதுடில்லியில் இந்திய குடியரசுத்தலைவர் டாக்டர் சங்கர் தயாள் சர்மாவை சந்தித்து பேச்சு நடாத்தும் சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாளை இந்தியப்பிரதமர் நரசிம்மராவுடன் பகல் போசன விருந்து ஒன்றிலும் கலந்து கொள்வார். புதுடில்லியில் தங்கியிருக்கும் போது வெளியுறவு அமைச்சர் தினேஷ்சிங், சட்ட மற்றும் நீதித்துறை இணை அமைச்சர் பி. ஆர். குமாரமங்கலம், வெளியுறவு இணை அமைச்சர் ஆர் எல். பாட்டியா ஆகியோரையும் சந்தித்துப் பேச்சுவார்த்தைகள் நடாத்த இருக்கிறார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஹேமாவுக்கு வருடாந்தம் ரூ.2,50,000 அரசு ஒதுக்கியது

(கொழும்பு)

திருமதி ஹேமா பிரேமதாசாவுக்கு ஒதுக்கப்பட்டுள்ள 'ஸ்ரான்மோர் கிறசன்ட்' இல்லம் அவருக்குக் கையளிக்கப்பட்டதும், அவர் ஜனாதிபதி மாளிகையை விட்டு வெளியேறுவார் என்று சபை முதல்வரும, போக்கு வரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சருமான விஜயபால மெண்டிஸ் பாராளுமன்றத்தில் கூறினார்.

கொழும்பு மாவட்ட எம்.பி, நிமால சிறிபால டி சில்வாவின் (சுதந்திரக கட்சி) கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதியின் பாத்தியதை ஷரத்து 4 இன்படி, ஜனாதிபதியின் சம்பளத்தில் மூன்றில் இரு பகுதியை திருமதி ஹேமா பிரேமதாசா ஒய்வூதியமாகப் பெறுவார். அத்துடன அவருக்கு உத்தியோகபூர்வ இருப்பிடம் இலவசமாக வழங்கப்படுவதுடன் ஓர் அமைச்சருக்கு வழங்கபபடுவதற்குச் சமமான தரத்தில் ஒரு செயலாளரும், பாதுகாப்பும் அளிக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார். இதற்கான செலவு வருடமொன்றுக்கு ரூபா 2,52,300 என மதிப்பிடப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

ஹேமா பிரேமதாசாவுக்குக் கொடுக்கப்படவுள்ள வீடு 1,32,150 ரூபா செலவில் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது

## ஐ. தே. க. கொழும்பு மாவட்ட தலைவராக மல்லிமாராச்சி

## பனை நடுகை

பூநகரி ப. நோ. கூ. ச 1992-ம் ஆண்டு 21900 பனை விதைகளை நடுகை செய்தது இப்பனை நடுகைத் திட்டத்திற்கு யாழ். மாவட்ட பனை அபிவிருத்திச் சபையும், யாழ். மாவட்ட தெங்கு பனம் பொருள் உற்பத்தி கூட்டுறவு ஆணையாளரின் பணிப்பில் பூநகரி தெங்குப்பனம்பொருள் உற்பத்திக் கூட்டுறவுச் சங்கமும் தலா 5000/- ரூபா நிதி உதவி செய்துள்ளன. 1993-ம் ஆண்டுமேற்படி சங்கம்50 000 எண்ணிக்கையான பனைவிதைகளை நடுவதற்கு திட்டமிட்டு உள்ளது.

## அறிவோர் கூடல் இரண்டாண்டு நிறைவு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை அறிவோர் கூடலினரின் 2-ம் ஆண்டு நிறைவுவிழா வைத்திய கலாநிதி மு. க. முருகானந்தனின் ஆரம்ப உரையுடன் ஆரம்பமானது எழுத்தாளர் திரு. தெணியான் தலைமையில் ''சுவடுகள்'' கலந்துரையாடலும், 'துளிர்கள்' திரு. து. குலசிங்கம் தலைமையிலும் நடைபெற்றன. திரு. சோ. கனகசுந்தரம், திரு. ம சங்கர் ஆகியோரின் நகைச்சுவை உரையாடல்களும், குழந்தை ம. சண்முகலிங்கத்தின் பிரதியாக்கதிலும், திரு. பா. இரகுவரனின் நெறியாள்கையிலும் உருவாக்கப்பட்ட ஒரு பூனையின் விலை என்ன? சிறுவர் நாடகமும் இடம்பெற்றன. பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. த. கலாமணி தலைமையில் நாடகக் கலந்துரையாடல் இடம்பெற்றது. கரவெட்டி ஞானாசாரியார் கல்லூரி அதிபர் திரு. க. கந்தையா தொகுப்புரை நிகழ்த்தினார். யாழ். பல்கலைக்கழக மெய்யியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி நாகநாதன், ஞானக்குமார் நன்றியுரை நிகழ்த்தினார். (25)

## ஆரம்ப சுகாதாரம் பேண கழிப்பறை, கிணறு தேவை

(யாழ்ப்பாணம்)

அகதிமுகாம்களின் ஆரம்ப சுகாதாரதததை பேணுவதற்கு மூன்று குடும்பங்களுககு ஒரு மலசல கூடமும் 500 குடும்பங்களுக்கு ஒரு குழாய்க்கிணறும் அவசியம் என சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர் பணிமனையில் நேற்று நடைபெற்ற வாராந்த கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி கூட்டத்தில் அகதி முகாம்களில் உள்ள மக்களின் ஆரம்ப சுகாதாரத்தை பேணுவது தொடர்பாக ஆராயப்பட்டபோதே சுகாதாரசேவைகள் பிராந்திய பணிப்பாளர் இவ்வாறு தெரிவித்தார். (சி)

## 1-ம் ஆண்டு 2-ம் ஆண்டு

## நில்வள கங்கையில் மிதந்த இளைஞனின் சடலம்

நில்வள கங்கையில் மிதந்து வந்த இளைஞனின் சடலம் ஒன்றை மாத்தறை முகத்துவாரத்தில் வைத்து பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.

கறுப்புக் காற்சட்டை அணிந்திருந்த இந்த இளைஞனின் முகம்சிதைக்கப்பட்டநிலையில் சடலம் காணப்பட்டது. காற்சட்டைப்பையில் பல கடிதங்களும் அடையாள அட்டையும் உக்கிய நிலையில் காணப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

## நினைவு கூருகின்றோம்... 1993-06-21

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் வீரச்சாவெய்திய -
★ மனோ/மதன் [கிருஷ்ணசாமி முனுசாமி - உயிலங்குளம - மன்னார்]

1987 ஆம் ஆண்டு யாழ்-உடுப்பிட்டி இலக்கணாவத்தையில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரின் போது வீரச்சாவெய்திய -
சுதா [தெய்வேந்திரம் செல்வானந்தராசா - மானாங்கானை - வல்வெட்டித்துறை]

1989 ஆம் ஆண்டு மட்டு-முறக்கொட்டாஞ்சேனையில் தேசவிரோத சக்திகள் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய -
நித்தி [க. விநாயகமூர்த்தி - முறக்கொட்டாஞ்சேனை - மட்டு.]

வவுனியா - மரக்காரம்பளைப் பகுதியில் இந்தியப் படையினருடனான சமரின் போது வீரச்சாவெய்திய -
கப்டன் சுதா [முத்துமாணிக்கர் சதானந்தன் - பண்டாரிகுளம் - வவுனியா]
பெனா/தயாபரன் [கனகசிங்கம் நல்லநாதன் - ஈச்சங்குளம், கல்மடு - வவுனியா]

வவுனியா - ஓமந்தை சொந்தக்காரன்குளம் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -
கார்த்திக் [சின்னத்துரை பரந்தாமன் - தாயகம், கற்சிலைமடு - முல்லைத்தீவு]
கப்டன் சிவா [கறுப்பையா செல்வரத்தினம் - பாலம் பெருமாள்கட்டு, வட்டக்கண்டல் - மன்னார்]
ராமகிருஷ்ணன் [பால்சாமி ஞானசேகரம் - கரம்பைக்குளம், அடம்பன் - மன்னார்]
பூட்டோ [காந்தலிங்கம் சிறிதரன் - ஆலங்குளம் - துணுக்காய்]
அரசன் [வடிவேல் ரவிச்சந்திரன் - அறத்திநகர் - பளை]

1990 ஆம் ஆண்டு மன்னார் ஆலங்குளத்தில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட கண்ணிவெடிவிபத்தில் எமைப் பிரிந்த -
2-ம் லெப். கிறிஸ்ரின் [அல்போன்ஸ் லிபேரியஸ் சிராய்வா - 3-ம்வட்டாரம், கடற்கரைவீதி, பேசாலை - மன்னார்]

மன்னார் - கொண்டைச்சி மரமுந்திரிகைப்பண்ணை சிறிலங்கா இராணுவமுகாம் தகர்ப்பின் போது வீரச்சாவெய்திய -
ரமணி [— மட்டு.]
குவேந்திரன் [— மணலாறு]
மேஜர் வசந்த் [போல்விக்ரர் விஜயதேவா - நறுவிலிக்குளம், வங்காலை - மன்னார்]
கப்டன் தனபால் [பொன்னுத்துரை சிறிரங்கநாதன் - பள்ளிக்குடா - பூநகரி]
லெப். சுப்பிரமணி [கதிரவேல் சுப்பிரமணியம் - பரப்புக்கடந்தான், வட்டக்கண்டல் - மன்னார்]
பிக்கன்ஸ் [குலராஜசிங்கம் சர்வேசன் - உயிலங்குளம் - மன்னார்]
சுபித்திரன் [மாடாசாமி இராஜரத்தினம் - சின்னப்பாப்பாகடை, தலைமன்னார் - மன்னார்]
சாந்தா [கறுப்பையா கண்ணன் - புகையிரத நிலையத்தடி, தலைமன்னார் - மன்னார்]

(இ-6862)

## சீனி விநியோகம்

வேலணை ப. நோ. கூ. சங்கம் தனது வாடிக்கையாளர்களுக்கு கட்டுப்பாட்டு விலைக்கு இரண்டு கிலோ சீனி அதன் மக்கள் கடைமூலம் வழங்கி வருகிறது. அத்துடன் தனது கிராமிய வங்கியின் ஒய்வூதியம் பெறுபவர்களுக்கான ஒய்வூதிய கொடுப்பனவு இரண்டு மாதங்களுக்கானது பணமாக வழங்கப்படுகிறது. (88)

## தையல் போட்டி

ஆண்டு3 முதல் ஆண்டு8 வரையுள்ள வகுப்பு மாணவர்களுக்கான தையல போட்டி ஒன்று கொத்தணி ரீதியில் இன்று காலை 8-30 மணி தொடக்கம் நண்பகல் 12-00 மணிவரை வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரியில நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் சகல மாணவர்களையும் கலந்துகொள்ளச் செய்யுமாறு உதவிக் கல்விப் பணிப்பாளர் (மனையியல) திருமதி ஆர். சண்முகரத்தினம அவர்கள் அதிபர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## சடலம் இனங் காணப்பட்டது

[வடமராட்சி]

நடுத்தர வயதுடைய ஆணின் சடலம் ஒன்று கரவெட்டி சோனப்பு மயானத்தில கண்டெடுக்கப்பட்டது.

பலாலியைச் சேர்ந்த வீ. கணபதிப்பிள்ளை (வயது 56) என்பவரது சடலமே இவ்வாறு அடையாளம் காணப்பட்டது.

குடும்பக் கவலையினால் நஞ்சு குடித்து இறந்ததாகவும் இது தற்கொலை எனவும மரணவிசாரணை அதிகாரி திரு வீ. நடராசா தீர்ப்புவழங்கனார். (யோ)

## அகால மரணம்

(சுன்னாகம்)

சென்ற 14 ஆம திகதி இரவு உருமபராய் அமுதன் வீதி, அன்னங்கையைச் சேர்ந்த கதிரவேலு நடராசா (வயது 25) என்பவர் மதுபோதையில கிணற்றுள் வீழ்ந்து மரணமானார் இவர் இரண்டு பிள்ளைகளின் தந்தை ஆவார்.

★ ★

(யாழ்ப்பாணம்)

கிணற்றில தண்ணீர் அள்ளும் போது தவறுதலாக கிணற்றினுள் விழுந்த இளம் குடும்பப பெண் ஒருவர் பரிதாபகரமாக மரணமடைந்துள்ளார்.

மேற்படி சம்பவம் கடந்த 16 ஆம் திகதி சுன்னாகம் சூறாவத்தை பகுதியில் நி-ழ்ந்துள்ளது. இச்சம்பவத்தின் போது இறந்தவர் தெல்லிப் பழையில் இருந்து இடம் பெயர்ந்து தற்போது சூறாவத்தையில வசித்து வந்த ரவிச்சந்திரன் சுதா (வயது 22) என்பவராவார்.

## ரூ.2,50,000 அரசு ஒதுக்கியது

(கொழும்பு)

திருமதி ஹேமா பிரேமதாசாவுக்கு ஒதுக்கப்பட்டுள்ள 'ஸ்ரான்மோர் கிறசன்ட்' இல்லம் அவருக்குக் கையளிக்கப்பட்டதும், அவர் ஜனாதிபதி மாளிகையை விட்டு வெளியேறுவார் என்று சபை முதல்வரும, போக்கு வரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சருமான விஜயபால மெண்டிஸ் பாராளுமனறத்தில் கூறினார்.

கொழும்பு மாவட்ட எம்.பி, நிமால சிறிபால டி சில்வாவின் (சுதந்திரக கட்சி) கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதியின் பாத்தியதை ஷரத்து 4 இன்படி, ஜனாதிபதியின் சம்பளத்தில் மூன்றில் இரு பகுதியை திருமதி ஹேமா பிரேமதாசா ஒய்வூதியமாகப் பெறுவார். அத்துடன அவருக்கு உத்தியோகபூர்வ இருப்பிடம் இலவசமாக வழங்கப்படுவதுடன் ஓர் அமைச்சருக்கு வழங்கபபடுவதற்குச் சமமான தரத்தில் ஒரு செயலாளரும், பாதுகாப்பும் அளிக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார். இதற்கான செலவு வருடமொன்றுக்கு ரூபா 2,52,300 என மதிப்பிடப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

ஹேமா பிரேமதாசாவுக்குக் கொடுக்கப்படவுள்ள வீடு 1,32,150 ரூபா செலவில் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது

## ஐ. தே. க. கொழும்பு மாவட்ட தலைவராக மல்லிமாராச்சி

ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்டத் தலைவராக அமைச்சர் வீரசிங்க மல்லிமாராச்சி நியமிக்கப்பட்டுள்ளார்.

அமைச்சர் வின்சன்ட் பெரேரா வகித்து வந்த பதவி அவர் இறந்ததையடுத்து வெற்றிடமாக இருந்துவந்தது. அவரின் இடத்திற்கு தற்போது வீரசிங்க மல்லிமாராச்சி நியமனம் பெற்றுள்ளார்.

வீரசிங்கமல்லிமாராச்சி இதுவரை காலமும் வகித்து வந்த செயலாளர் பதவி அமைச்சர் டிரோன் பர்னாண்டோவிற்கு வழங்கப்பட்டுள்ளது.

## இணைக்கும் போது சம்மதம் கேட்டீர்களா? - இலியாஸ்

(கொழும்)பு

''வடக்கையும், கிழக்கையும் இணைக்கலாயா?'' இவ்வாறு கேட்காமலேயே 987 இல் முன்னாள் ஜனாதிபதி ஜே ஆர். ஜெயவர்த்தனா வடககையும் கிழக்கையும் இணைத்தார். இப்போது வடக்கையும் கிழக்கையும் பிரிப்பதற்கு அரசு ஏன் மக்களிடம் ஒப்பம் கேட்கவேண்டும் என்று டாக்டர் கே. எம். இலியாஸ் கேட்டுள்ளார்.

வட-மேற்கு மாகாண முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் கே. எம். இலியாஸ் புத்தளத்தில் கூட்டம் ஒன்றில் பேசும்போது இவ்வாறு கூறினார்.

வடக்கு-கிழக்கு இணைப்பை ஆதரித்து முஸ்லிம்கள் வாக்களித்தால், அவர்கள்புலிகளுக்குத துணைபோவதாகப் பெரும்பான்மைச் சமூகம் எங்கள் மீது சந்தேகம் கொள்ளும். வடக்கு - கிழக்கு இணைபபை எதிர்த்து வாக்களித்தால் புலிகள் ஆத்திரம் கொண்டு எம் மேல் தாக்குதல் நடத்துவார்கள். எவ்வாறாயினும் முஸ்லிம்கள் தான் இழபபைச் சந்திக்கவேண்டி ஏற்படும் இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய அவர், மக்கள் இணைப்புச்கு எதிராக வாக்களித்தாலும், ஆதரவாக வாக்களித்தாலும் சரி, முஸ்லிம்கள், தமிழர்கள், சிங்களவர்என்றுமு தரப்புச்சண்டை ஏற்பட இடமுண்டு முஸ்லிம்களை அரசு ஒரு பொறியில் மாட்டியுள்ளது என்றும்,

ஒப்புதல் வாக்கெடுப்புக்கு எதிராக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஓர் அரசியல் போராட்டத்தை ஆரம்பிக்கவுள்ளது என்றார்.

## வடமைப்பு உதவி இவ்வாண்டுவிரிவ கும்

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை இந்தவருடத்தில் தூயமானியத்திட்டம், கடன் மேவு மானியத்திட்டம், தூய கடன் திட்டம் என்பவறறை அமுல்படுத்தவுள்ளது.

குறிப்பிட்ட அளவு குடும்பங்களே இந்தத் திட்டங்களின் கீழ் தெரிவு செய்யப்பட இருப்பதால் மேலதிக விபரங்களை பெறவிரும்புவோர் புதன் கிழமை நாட்களில் பிரதேச செயலாளரை அல்லது உதவி வேலைப் பரிசோதகரை பிரதேச செயலகங்களில் சந்தித்து பெற்றுக்கொள்ளலாம் என்று தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் மாவட்ட முகாமையாளர் விடுத்த செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கலம், வெளியுறவு இணை அமைச்சர் ஆர் எல். பாட்டியா ஆகியோரையும் சந்தித்துப் பேசசுவார்த்தைகள் நடாத்த இருக்கிறார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

... தையா தொகுப்புரை நிகழ்த்தினார். யாழ். பல்கலைக்கழக மெய்யியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி நாகநாதன், ஞானக்குமார் நன்றியுரை நிகழ்த்தினார். (25)

## ஆரம்ப சுகாதாரம் பேண கழிப்பறை, கிணறு தேவை

(யாழ்ப்பாணம்)


அகதிமுகாம்களின் ஆரம்ப சுகாதாரததை பேணுவதற்கு மூன்று குடும்பங்களுககு ஒரு மலசல கூடமும் 500 குடும்பங்களுக்கு ஒரு குழாய்க்கிணறும் அவசியம் என சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர் பணிமனையில் நேற்று நடைபெற்ற வாராந்த கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி கூட்டத்தில் அகதி முகாம்களில் உள்ள மக்களின் ஆரம்ப சுகாதாரத்தை பேணுவது தொடர்பாக ஆராயப் பட்டபோதே சுகாதாரசேவைகள் பிராந்திய பணிப்பாளர் இவ்வாறு தெரிவித்தார். (சி)

---

**1-ம் ஆண்டு நினைவஞ்சலி** | **2-ம் ஆண்டு நினைவஞ்சலி**





**லெப்டினன்ட் சோழன்** (செலஸ்ரின் விஜயராஜ்)
வீரப்பிறப்பு: 16-10-1973 வீரச்சாவு: 21-06-1992

**வீரவேங்கை ஆனந்தராஜ்** (செலஸ்ரின் ஆனந்தராஜ்)
வீரப்பிறப்பு: 01-10-1975 வீரச்சாவு: 30-04-1991

தமிழீழ வளநாட்டின் தனித்த பெரும்வீரரே
மண்ணுக்காய் உயிர்கொடுத்த செல்வங்களே
பொன்னுக்காய் பொருளுக்காய் பறக்கின்ற வேளையில்
எம் மண்ணுக்காய் உயிர் நீத்த மாவீரரே
பொங்கிவரும் கண்ணீர் புரையோடும் வேதனையும்
தங்கமென நீ வளர்த்த தியாகச்சுடர் கண்டு தணியும்
பொங்கிவரும தாகமும் புரையோடும் வீரமும்வென்றிடும்
தமிழீழம் காண்பாய் வித்தான வீரரன்றோ நீங்கள்

இவர்களின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 21-06-93 திங்கட்கிழமை காலை 6 00 மணிக்கு புனித யாகப்பர் ஆலயத்தில் நடைபெறும் திருப்பலியில் பங்குபற்றுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

288, பாங்சால் வீதி,
குருநகர்,
யாழ்ப்பாணம்.
(5187)

இவர்களின் பிரிவால் துயருறும்
தந்தை, தாய், அண்ணா,
அக்கா, அன்ரிமார், அண்ணி,
அத்தான், தம்பிமார்
அம்மம்மா.

---

பாராதவிதமாக ஏற்பட்ட கண்ணிவெடிவிபத்தில் எமைப் பிரிந்த -

2-ம் லெப். கிறிஸ்ரின் [அல்போன்ஸ் லிபேரியஸ் சிராய்வா- 3-ம்வட்டாரம், கடற்கரைவீதி, பேசாலை - மன்னார்]

மன்னார் - கொண்டைச்சி மரமுந்திரிகைப்பண்ணை சிறிலங்கா இராணுவமுகாம் தகர்ப்பின் போது வீரச்சாவெய்திய -

ரமணி [— மட்டு.]

குவேந்திரன் [— மணலாறு]

மேஜர் வசந்த் [போல்விக்ரர் விஜயதேவா-தறுவிலிக்குளம், வங்காலை - மன்னார்]

கப்டன் தனபால் [பொன்னுத்துரை சிறிரங்கநாதன் - பள்ளிக்குடா - பூநகரி]

லெப். சுப்பிரமணி [கதிரவேல் சுப்பிரமணியம் - பரப்புக்கடந்தான், வட்டக்கண்டல் - மன்னார்]

பிக்கன்ஸ் [குலராஜசிங்கம் சர்வேசன் - உயிலங்குளம் - மன்னார்]

சுபித்திரன் [மாடாசாமி இராஜரத்தினம் - சின்னப்பாபாப்பாகடை, தலைமன்னார் - மன்னார்]

சாந்தா [கறுப்பையா கண்ணன் - புகையிரத நிலையத் தடி, தலைமன்னார் — மன்னார்]

பஞ்சன் (அந்தோனிப்பிள்ளை ராஜன் வேந்தக்கோன் - மாளிகைப்பிட்டி, முருங்கன் - மன்னார்)

லெப். கோபிநாத் (வடிவேல் ஜெயராஜ் - இல 124, 2-வது பண்ணை - வவுனியா)

பயஸ் (கந்தசாமி கருணேந்திரன் - மயிலிட்டி- யாழ்)

மேனன் (கிருஷ்ணா சத்தியமூர்த்தி - பரப்புக்கடந்தான் வட்டக்கண்டல் மன்னார்)

அம்பாறையில் சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட மட்டு பெரியநீலாவணை 1ஐச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன் மற்றும் மட்டுநகரில் வேலைக்குச் சென்று காணாமல் போன குமரபுரம் - புன்னைச் சோலையைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

திருமலை - கந்தளாய்ப் பகுதியில் சிறிலங்காப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 13 தமிழர்கள், மற்றும் கல்லோயா புகையிரதநிலையத்திலிருந்த சிங்களக்காடையர்களினால் சுட்டுக் கொல்லப்பட்ட மட்டு - புகையிரத நிலைய விடுதி வாசிகளான 03 தமிழர்கள்.

வவுனியா - பண்டாரிககுளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 02 தமிழர்கள்.

தமிழீழக் கடற்பரப்பில் படகில் பயணம் செய்துகொண்டிருந்த போது சிறிலங்கா கடற்படையினரால் மூழ்கடிக்கப்பட்டுக் கொல்லப்பட்ட 07 தமிழர்கள்.

1991ஆம் ஆண்டு கடலில் சிறிலங்காக் கடற்படையினர் மேறகொண்ட பீரங்கித் தாக்குதலில் வீரச்சாவெய்திய-

அமல் (வில்லியராஜா றொபேட் - 60/4, சொலமன்வீதி, கொய்யாத்தோட்டம் - யாழ்)

மட்டுநகரில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் கொலலப்பட்ட சித்தாண்டியைச் சேர்ந்த தமிழ் விவசாயி.

1992ஆம் ஆண்டு மட்டு - உன்னிச்சை நலரைக் கட்டைப் பகுதியில் சிறிலங்கா இராணுவம் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

2-ம் லெப் மிருணன்/சதீஸ் (நாகலிங்கம் தவச்செல்வன்- ஆரையம்பதி - மட்டு)

துசிதன் (செல்வநாயகம் ரகுநாதன் - 9-ம் வட்டாரம், கொக்கட்டிச்சோலை - மட்டு)

கட்டுவன் காவலரணில் எதிர்பாராத விதமான வெடி விபத்தில் வீரச்சாவெய்திய-

லெப். சோழன் (செபஸ்ரின் விஜயராஜ் - புனிதஜேம்ஸ் வீதி, குருநகர் - யாழ்)

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

★ இக்குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் இணைந்து செயற்பட்டவராவர்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி/6869)

## சிந்தனைக்கு

எல்லாவற்றையும் கவனமாக அணுக வேண்டும் எதையும் கவலையுடன் அணுகத்தேவையில்லை.

— அதாஸ்ப் தியர்ஸ்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 21-06-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05

## அரசியல் தீர்வில் அக்கறை தேவை

போர்க் கைதிகளின் விடுதலை தொடர்பாக விடுதலைப் புலிகள் ஏற்புடைய நிபந்தனையொன்றை முன் வைத்துள்ளார்கள். இது கைதிகள் விடுதலைக்கான நிபந்தனை என்பதை விட, இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான ஓர் அடித்தளத்தை உருவாக்கும் நோக்குக் கொண்டதான முன் ஏற்பாட்டு நடவடிக்கை எனக் கொள்ளுதலும் பொருந்தும்.

யுத்தக்கைதிகள் விடுதலை தொடர்பாக முன்னர் விடுதலைப்புலிகள் முன் வைத்த நிபந்தனையை இராணுவம் ஏற்கவில்லை. புலிகள் என்ற சந்தேகத்தின் பேரில் கைதாகி காவலிலுள்ளவர்களின் பெயர்ப்பட்டியலை அரசாங்கம் வெளியிட மறுத்து விட்டது. இந் நிலையிலேயே பொருளாதாரத் தடையை நீக்குமாறு விடுதலைப் புலிகள் புதிய நிபந்தனை ஒன்றை விதித்துள்ளார்கள்.

பொருளாதாரத் தடையை நீக்கவேண்டும் என்ற கோரிக்கையானது மக்களின் தரப்பில்; இருந்து விடுதலைப்புலிகளால் முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கை என்றேகொள்ளலாம். கடந்த மூன்று வருடங்களுக்கு மேலாக அரசாங்கம் மேற்கொண்டு வரும் பொருளாதாரத் தடையானது, மக்களின் அன்றாட வாழ்க்கையைப் பெரிதும் பாதித்துள்ளது. மக்கள் தொழிலிழந்து, சொல்லொணாத் துயர்களை அநுபவித்து வருகின்றனர். இந்நிலையில் பொருளாதாரத்தடையை நீக்கி மக்களின் துயரைபோக்குமாறு ஒரு நிபந்தனையை விடுதலைப் புலிகள் முன் வைத்தமையானது வரவேற்கத் தக்கதே.

இதேவேளை, விடுதலைப்புலிகள் பிரிகேடியர் ஆனந்த வீரசேகராவுடன் நடத்திய பேச்சுக்களின் போதுபொருளாதாரத்தடை நீக்கம்என்பதை தனியாக போர்க்கைதிகளுக்கான நிபந்தனையாக மட்டும் கொள்ளாமல், அரசியல் தீர்விற்கான பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கான சூழ்நிலை ஒன்றை உருவாக்குவதற்கான ஒரு நடவடிக்கையாக மேற் கொள்ளலாம் எனவும் தெரிவித்திருந்தனர்,

அதாவது, இனப்பிரச்சினைக்கு ஒரு சமாதான தீர்வை ஏற்படுத்தக் கூடிய ஒரு நல்லெண்ணச் சூழலை உருவாக்க இதனை பயன்படுத்துமாறு அரசாங்கத்திடம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது விடுதலைப்புலிகள் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்கான தகுந்த நிலைப்

# வடபகுதி கல்வி நிலை பெரும் பாதிப்பு; இளம் சந்ததி எதிர் கொள்ளும் அவலம்

யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா அண்மையில் கொழும்பில் நடைபெற்ற பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் கொழும்பு கிளையின் 37ஆவது ஆண்டு பொதுக்கூட்டத்தில் தலைமை தாங்கிப் பேசிய உரையை இங்கு தருகின்றோம்.

கடந்த இரண்டு ஆண்டுகளிலும் வடக்கில் வெளியான க. பொ. த. சாதாரண தர மற்றும் உயர்தரப் பரீட்சை முடிவுகள் மிகுந்த கவலையை அளிக்கின்றன. இவை வடக்கின் கல்வித் தராதரம் சரிந்து கொண்டு போவதையே காட்டுகின்றது. சாதாரண தரப் பரீட்சையில் எட்டுப் பாடங்களிலும் அதிதிறமைச்சித்தி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை வெகுவாக வீழ்ச்சியடைந்துள்ளது. அதுபோல உயர்தரப் பரீட்சையில் நான்கு பாடங்களிலும் பல மாணவர்கள் முன்பு ஏ தரச்சித்தி பெற்றார்கள். மூன்று ஏ, ஒரு பி மிக அதிகமான மாணவர்கள் முன்பு பெற்றார்கள். இன்று மிகச் சிலரே நான்கு பாடங்களிலும் ஏ சித்தி பெறுகிறார்கள். மூன்று ஏ, ஒரு பி சித்தி பெற்ற மாணவர்களும் மிகச் சிலரே. முன்பு கணிசமான அளவு மாணவர்கள் கொழும்பைப் போல் அகில இலங்கை தராதர அடிப்படையில் பல்கலைக்கழக அனுமதி பெற்றார்கள். இன்று இந்த எண்ணிக்கை மிகச் சுருங்கி விட்டது. மாவட்ட அடிப்படையிலான ஒதுக்கீடு இருப்பதால் தான் இன்று ஓரளவு மாணவர்களாவது பல்கலைக்கழகம் செல்ல முடிகிறது.

வடக்கில் நிலவும் இந்நிலை தொடர்பாக உரியவர்கள் உடனடியாகத் தகுந்த நடவடிக்கை எடுக்கத் தவறினால் ஓர் இளம் சந்ததியைப் பாழடித்த பழியை அவர்கள் சுமக்க நேரும்.

இவ்வாறு வடக்கில் கல்வி நிலையில் தளப்பநிலை என்றுமில்லாதவாறு காணப்படுவதற்கு நான்கு காரணங்கள் உண்டு. முதலாவது காரணம் அரசு மக்கள் மீது திணித்துள்ள நெருக்குதல்கள் பொருள்களுக்குத்தட்டுப்பாடு, அதனால் ஆனைவிலை, குதிரை விலை கொடுத்துத் தான் பொருள்களை வாங்க வேண்டியுள்ளது. யாழ்ப்பாணத்தில் உள்ள சாதாரண மக்களுக்கு இதுகட்டுப்படியாகாது உணவுப்பொருள்களும் இந்த விலையில்தான் விற்கப்படுகின்றன. பெற்றார் வயிற்றைக் கட்டி, வாயைக்கட்டிச் சமாளித்தாலும் பிள்ளைகளுக்குச் சரியான சத்துணவு கிடைப்பதில்லை. இதனால் நோய் நொடி, சோர்வு அதிகம். பச்சிளம் குழந்தைகளுக்கே பால் உணவுத் தட்டுப்பாடு, மருந்துகளும் கிடையாது.

இரண்டாவது காரணம் இங்குள்ள ஆசிரியர்கள் பிள்ளைகளை நட்டாற்றில் விட்டு விட்டுச் சொகுசுக்காகவும், மேலதிக உழைப்புக்காகவும் கொழும்புக்கு வந்துவிட்டனர். அதிலே இன்னொரு மர்மமும் உண்டு. யாழ்ப்பாணப் பாடசாலைகளிலே ஆளணி எண்ணிக்கையில் இவர்களின்பெயர்களும் அங்கே உண்டு. லீவு என்ற காரணத்தினாலோ அல்லது வேறு காரணத்தினாலோ அவர்கள் இல்லை. இதனால் ஆசிரியர் பற்றாக்குறை இல்லை என்ற போர்வையும் போர்த்தப்படுகின்றது. இந்த மனச்சாட்சி இல்லாத நாடகத்தில் இந்த ஆசிரியர்கள் மட்டுமல்ல. கல்வியோடு தொடர்புள்ள அதிகாரிகளும், சில அரசியல்வாதிகளும் நன்றாக நடித்துவருகிறார்கள்.

மூன்றாவது காரணம் இன்றைய புதுரக ஆசிரியர்கள். இவர்களுக்கு மாணவர்களின் கல்வி நலனைக்காப்பது தமது புனித கடமை என்ற உணர்வு கிடையாது. இவர்களைப் பொறுத்தவரை இது சம்பளம் கிடைக்க வழிசெய்யும் ஒரு தொழில். அவ்வளவுதான் அவர்களுக்கு முன்னைய ஆசிரியர்களைப்போன்ற அர்ப்பண உணர்வு கிடையாது கடந்த இரண்டு தசாப்தங்களாகச் செய்யப்பட்ட இந்த ஆசிரிய நியமனங்களால் கல்வி தேய்கிறது. மாணவர்கள் பலியாகிறார்கள்.

நான்காவது காரணம் யாழ்ப்பாணத்தில் இன்று ரியூட்டரிக் கல்வியும் பாதிப்படைந்துள்ளது. மின்சாரம் இல்லாததால் காலை வகுப்புக்கள், மாலை வகுப்புக்கள் வெகுவாகக் குறைக்கப்பட்டுவிட்டன. மண்ணெண்ணெய் விளக்குகள் வைப்பதற்குக்கூட மண்ணெண்ணெய் போதிய அளவு கிடைப்பதில்லை. இதனால் மாணவர்கள் அதிகாலையிலும், இரவிலும் கூடப் படிக்க முடிவதில்லை. காலையிலும், மாலையிலும்தான் அவர்கள் வீட்டிலும் அதிகம் படிக்கும் நேரம். அர்த்தமில்லாத முறையில் அமைந்துள்ள நம் நாட்டுக் கல்விமுறையில் அர்த்தமில்லாத போட்டிப் பரீட்சையில் தேறித்தான் பல்கலைக்கழகம் செல்லமுடியும்.

இந்தப் பின்னணியில் பார்க்கும்போது வடபகுதி ரியூட்டரிகள் அடைந்துள்ள பின்னடைவும் நமது மாணவர்களின் கல்விப் பாதிப்புக்கு முக்கிய காரணமாகிறது. அர்த்தமுள்ள தேசியக் கல்விக்கொள்கை - மண்வளம், இயற்கைவளம், தொழில் வளம் என்பவற்றின் பயன்பாட்டுக்கு ஈடுசெய்யும் மனிதவள வளர்ச்சி என்ற ரீதியிலான கல்விக் கொள்கை வகுக்கப்படும்வரை ரியூட்டரிக் கல்வியின் பயன்பாட்டை நிராகரித்துவிட முடியாது. ரியூட்டரிக் கல்வி பாதிப்படைந்த நிலையிலும் கல்விக் கூடங்களில் ஆசிரியர்கள் இந்த இழப்பை ஈடுசெய்ய முயற்சிப்பதில்லை.

இது மட்டுமல்ல உயர்தர வகுப்பில் கல்வியைத் தொடர முடியாமலும் பல்கலைக்கழகம் செல்ல முடியாமலும் கல்வியைக் கைவிட்டவர்கள் நிலையும் மிகப் பரிதாபம். வசதி உள்ளவர்கள் ஏதோகொழும்பு வந்து சேர்ந்து கணக்கியலிலோ, கணனியியலிலோ தேறி நன்றாக இருக்கிறார்கள். சில கற்கைகள் யாழ்ப்பாணம் நகரில் கற்பிக்கப்படுகின்றன. ஆனால் தூரஇடத்துப் பல மாணவர்கள் அங்கு போக முடியாது. சைக்கிள் வேண்டும் எல்லோராலும் இப்போ சைக்கிள் வைத்துப் பராமரிக்க முடியாது. உதாரணமாக வடமராட்சி மாணவர்களை எடுத்துக் கொள்ளலாம்' யாழ்ப்பாணம் சென்று படிக்க வசதி இன்றி பல மாணவர்கள் காலத்தை வீணடிக்கிறார்கள். அத்தகைய கற்கைகளை வடமராட்சி போன்ற இடங்களிலும் ஒழுங்கு செய்யலாம். ஆனால் அதற்குவசதிபடைத்தவர்களின் வள்ளல்தன்மை வேண்டும். யாராவது உதவ முன்வந்தால் இந்த நிலைமையைச் சமாளிக்க முடியும்.

### நவம்பர் 4ஆம் திகதியன்று

# பிரதமர் ராவை இல்லத்தில் மேத்தா சந்திக்கவில்லை

### இந்திய அரசு விளக்கம்

(டில்லி)

பங்குத் தரகர் ஹர்சத் மேத்தா, பிரதமர் நரசிம்மராவை சந்தித்ததாகக் கூறிக் கொள்ளும் நாளின் குறிப்பிட்ட நேரத்தில் பிரதமர் ராவ் அரசியல் விவகாரங்களுக்கான அமைச்சரவைக் கூட்டத்திற்கு தலைமை தாங்கிக் கொண்டிருந்தார் என்று இந்திய அரசு திட்டவட்டமாகக் கூறியுள்ளது.

### பி.ஜே. பிக்கும் மேத்தாவுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு

அண்மையில் பம்பாயில் பத்திரிகையாளர்கள் மாநாடு ஒன்றை நடாத்திய பங்குத் தரகர் ஹர்சத் மேத்தா அங்கு வெளியிட்ட சத்தியக் கடதாசியில் 1991 நவம்பர் 4-ம் திகதியன்று காலை 10.45 மணிக்கு

### பங்குச் சந்தை ஊழல் பற்றிய விசாரணை முட்டுக்கட்டை?

(டில்லி)

பங்கு சந்தையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஊழல் மோசடிகள் குறித்த பாராளுமன்ற கூட்டுக்கமிட்டியின் விசாரணைகளை குழப்பவும், முட்டுக்கட்டை போடவும் பாரதிய ஜனதாக் கட்சி முயல்கின்றது. இவ்வாறு பிரதமர் நரசிம்மராவ் குற்றம் சுமத்தியுள்ளார்

அவர் மேலும் கூறுகையில்; பாராளுமன்றத்தைக் கலைக்கச் செய்வதன் மூலம் பாராளுமன்ற கூட்டுக்கமிட்டியின் விசாரணைகளை தடுக்கலாம் என்று திட்டமிட்டே தன்மீது ஊழல் குற்றம் சுமத்தப்பட்டிருப்பதாகவும், பாராளுமன்றம் கலைக்கப்பட்டால் ஊழல்பேர்வழிகள் தண்டனையிலிருந்து தப்ப வழி ஏற்படும் என்றும் தெரிவித்தார்.

காங்கிரஸ் கட்சியை ஜனநாயக ரீதியாக வெல்ல முடியாத சக்திகள் அதன் மீது களங்கம் கற்பிக்க முனைந்து செயற்படுவதாகவும் காங்கிரஸ் கட்சியின் மகளிர் அணியினரிடையே பேசுகையில் அவர் மேலும் தெரிவித்தார்.

### பிரதமர் நரசிம்மராவ் உடன் பதவி விலக வேண்டும்

கொண்டு வரும் பொருளாதாரத் தடையானது, மக்களின் அன்றாட வாழ்க்கையைப் பெரிதும் பாதித்துள்ளது. மக்கள் தொழிலிழந்து, சொல்லொணாத் துயர்களை அனுபவித்து வருகின்றனர். இந்நிலையில் பொருளாதாரத்தடையை நீக்கி மக்களின் துயரைபோக்குமாறு ஒரு நிபந்தனையை விடுதலைப் புலிகள் முன் வைத்தமையானது வரவேற்கத்தக்கதே.

இதேவேளை, விடுதலைப்புலிகள் பிரிகேடியர் ஆனந்த வீரசேகராவுடன் நடத்திய பேச்சுக்களின் போதுபொருளாதாரத்தடை நீக்கம்என்பதை தனியாக போர்க்கைதிகளுக்கான நிபந்தனையாக மட்டும் கொள்ளாமல், அரசியல் தீர்விற்கான பேச்சுவார்தைகளை நடத்துவதற்கான சூழ்நிலை ஒன்றை உருவாக்குவதற்கான ஒரு நடவடிக்கையாக மேற் கொள்ளலாம் எனவும் தெரிவித்திருந்தனர்,

அதாவது, இனப்பிரச்சினைக்கு ஒரு சமாதான தீர்வை ஏற்படுத்தக் கூடிய ஒரு நல்லெண்ணச் சூழலை உருவாக்க இதனை பயன்படுத்துமாறு அரசாங்கத்திடம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது விடுதலைப்புலிகள் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்கான தமது நிலைப்பாட்டை தொடர்ந்தும் வற்புறுத்தும் ஒன்றாகவே அமைந்துள்ளது.

ஆனால், சிறிலங்கா அரசாங்கம் போர்க்கைதிகள் குறித்தோ அன்றி, இனப்பிரச்சினைக்கு ஒரு சமாதான சூழல் உருவாவது குறித்தோ பெரியளவில் நாட்டம் கொண்டுள்ளதாகத் தெரியவில்லை. விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தைநடத்தவும் அரசியல் தீர்வுகாணவும் அவர்கள் பெரும் ஆர்வம் கொண்டிருப்பதாகவும் இல்லை.

ஏனெனில் விடுதலைப் புலிகளின் காவலிலிருக்கும் 38 பொலிஸாரும், ஓர் இராணுவச் சிப்பாயும் போர்க்கைதிகளாக இருப்பினும் அவர்களை விடுவிக்கும் நடவடிக்கை தனியாக ஓர் இராணுவ நடவடிக்கை அல்ல. சிறிலங்கா இராணுவத்தால், விடுதலைப்புலிகளின் காவலிலுள்ள கைதிகளை ஓர் இராணுவ அதிரடி நடவடிக்கை மூலம் மீட்டெடுக்க ஒருபோதும்முடியாது. ஆகையினால், இவர்களின் விடுதலைக்கான முயற்சியை அரசியல் நடவடிக்கை மூலமே மேற்கொள்ள முடியும்.

இந்நிலையில், போர்க்கைதிகளின் விடுதலைக்கென விடுதலைப்புலிகள் முன்வைக்கும் கோரிக்கைகளை கூட்டுப்படைநடவடிக்கை தலைமையகத்திடம் அரசாங்கமும், அரசியல் வாதிகளும் ஒப்படைத்துவிட்டு பார்த்துக் கொண்டிருப்பதினால்பிரச்சினை தீரப்போவதில்லை. முதலில் காவலிலுள்ள சந்தேக நபர்களின் பெயர்களை வெளியிட மறுத்த கூட்டுப்படை நடவடிக்கை தலைமையகம் தற்பொழுது பொருளாதாரத் தடையை நீக்குவதை எவ்வாறு சாதகமாக பரிசீலிக்க முடியும்? இராணுவ ரீதியில் வெற்றியீட்டுவதையே முழுமையான குறிக்கோளாகக் கொண்டு செயற்படும் இராணுவத்தலைமை இதற்கு எவ்வாறு ஒப்புதல்அளிக்கும்?

இந்நிலையில்போர்க்கைதிகளின் விடுதலையும் புலிகளின் நிபந்தனைகளை நிறைவேற்றுவது என்பதும் முக்கியமான அரசியல் தீர்மானங்களிலேயே தங்கியுள்ளது. இதற்கு அரசாங்கம் தயாராக வேண்டும். இதை விடுத்து இதை தனியாக இராணுவத்தினரின் பிரச்சினையாகவே அரசாங்கம் கருதுமானால், இதனால், அரசாங்கமே அதிக நட்டம் அடையும். ஒன்று, கைதிகளின் உண்ணாவிரதத்தினால் அரசிற்கு எதிரான நெருக்குதல் அதிகரிக்கலாம். இரண்டு, இனிமேல் எப்பொழுதுமே இராணுவத்தை மீறி அரசாங்கம் எத்தீர்மானமும் எடுக்கமுடியாது போகலாம்.

டிக்கை எடுக்கத் தவறினால் வாலோ அவர்கள் இல்லை. ... துள்ளது. மின்சாரம் இல்லாத ... யும் மனிதவள வளர்ச்சி என்ற ... யைச் சமாளிக்க முடியும்.

ஓர் இளம் சந்ததியைப் பாழ... இதனால் ஆசிரியர் பற்றாக்...

## நவம்பர் 4ஆம் திகதியன்று

# பிரதமர் ராவை இல்லத்தில் மேத்தா சந்திக்கவில்லை

### இந்திய அரசு விளக்கம்

(டில்லி)

பங்குத் தரகர் ஹர்சத் மேத்தா, பிரதமர் நரசிம்மராவை சந்தித்ததாகக் கூறிக் கொள்ளும் நாளின் குறிப்பிட்ட நேரத்தில் பிரதமர் ராவ் அரசியல் விவகாரங்களுக்கான அமைச்சரவைக் கூட்டத்திற்கு தலைமை தாங்கிக் கொண்டிருந்தார் என்று இந்திய அரசு திட்டவட்டமாகக் கூறியுள்ளது.

அண்மையில் பம்பாயில் பத்திரிகையாளர்கள் மாநாடு ஒன்றை நடாத்திய பங்குத் தரகர் ஹர்சத் மேத்தா அங்கு வெளியிட்ட சத்தியக் கடதாசியில் 1991 நவம்பர் 4-ம் திகதியன்று காலை 10.45 மணிக்கு பிரதமர் நரசிம்மராவை அவரது ரேஸ் கோர்ஸ் வீதியிலுள்ள இல்லத்தில் சந்தித்து ஒரு கோடி ரூபா கொடுத்ததாகக் கூறியிருந்தது தெரிந்ததே

இது தொடர்பாக இந்திய அரசின் செய்தித் தொடர்பாளர் மேலும் விளக்குகையில்; 1991 நவம்பர் 4-ம் திகதி காலை ஒன்பது மணி முதல் பகல் ஒன்றேகால் மணி வரை பிரதமர் நரசிம்மராவ் தமது இல்லத்தில்இருக்கவே இல்லை என்றும், குடியரசுத் தலைவர் மாளிகையில் காலை ஒன்பது மணிக்கு குடியரசுத் தலைவருடன் காலை உணவு அருந்திய பிரதமர் ராவ் அங்கிருந்து நேராக அலுவலகம் சென்றார் என்றும், காலை பத்து மணிக்கு ஆரம்பமான அரசியல் விவகாரக் குழுக் கூட்டத்திற்குராவ் தலைமை ஏற்றார் என்றும் தெரிவித்தார்.

அத்துடன் பிரதமர் ராவை சந்தித்ததாக ஹர்சத் மேத்தா குறிப்பிடும் 10.45 மணிக்கு பிரதமர் ராவ் தமது அலுவலகத்தில் பாகிஸ்தானிலிருந்து வந்திருந்த கல்வியாளர் குழுவுடன்பேசிக்கொண்டிருந்தார் என்றும் அப்பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

## பி.ஜே.பிக்கும் மேத்தாவுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு

- பிரதமர் நரசிம்மராவ்

(டில்லி)

பாரதீய ஜனதாக் கட்சிக்கும், பங்குத்தரகர் ஹர்சத் மேத்தாவுக்கும் இடையில் நெருக்கமான தொடர்புகள் இருப்பதை தற்போது தமக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் பிரசாரங்கள் தெளிவாக எடுத்துக்காட்டுவதாக பிரதமர் நரசிம்மராவ் பகிரங்கமாகக் கூறியுள்ளார்.

நேற்றுமுன்தினம் புதுடில்லியில் நடைபெற்ற பாராளுமன்ற காங்கிரஸ் உறுப்பினர்களின் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசியஅவர் மேலும் குறிப்பிடுகையில்; மதத்தை அரசியலுக்கு பயன்படுத்தும் சக்திகள் தற்போது தமக்கு எதிராக அபாண்டமான குற்றச்சாட்டுகளை சுமத்தி பெரும் அளவில் பிரசாரம் மேற்கொண்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஒன்றில் பிரதமர் நரசிம்மராவ் மீது முழுநம்பிக்கை இருப்பதாகத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

## காஷ்மீரில் தேர்தல் நடத்த மத்திய அரசு பெரும்முயற்சி

(டில்லி)

இந்த வருட இறுதிக்கு முன்பாக தேர்தலை நடத்துவதற்கு வழிசெய்யும் வகையில் பாதுகாப்புப் படைகள் காஷ்மீர் மாநிலத்தில் பெரும் எடுப்பிலான தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன.

ஜம்மு காஷ்மீர் மாநிலதலைநகர் ஜம்முவில் நிருபர்களிடையே பேசிய மாநில ஆளுநர் கிருஷ்ணராவ் மேலும் கூறுகையில் கடந்த ஆறு வருடங்களுக்குப் பின்னர் தேர்தல் நடத்துவதற்கு இப்போது தான் முயற்சி மேற்கொள்ளப்படுவதாகவும், எதிர்வரும் மூன்று அல்லது நான்கு மாதங்களில் தீவிரவாதிகளின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்திட முடியும்என்று நம்புவதாகவும் தெரிவித்தார்.

## கறுப்புப்பண அரசியலுக்கு முற்றுப்புள்ளி இட வேண்டும்

–ஏ. பி. வாஜ்பாய்

(பெங்களூர்)

அரசியல் குற்றங்கள் பெருகுவதையும், ஊழலையும் தடுக்கும் வகையில் கறுப்புப்பண அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைக்க தமது கட்சி உறுதி பூண்டிருப்பதாக பாரதீய ஜனதாக் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான ஏ. பி. வாஜ்பாய் தெரிவித்தார்.

பெங்களூரில் கட்சியின் தேசிய செயற்குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய அவர் மேலும் கூறுகையில், காசோலைகள் மூலமாகத்தான் அரசியல் கட்சிகள் நன்கொடை பெற வேண்டும் என்றும், தேர்தல் சீர்திருத்தங்களைஉடனடியாக செய்வதன் மூலம்தான் நாட்டின் ஊழல் மிகுந்த அரசியல் அமைப்பை தூய்மைப்படுத்த முடியும் என்றும் குறிப்பிட்டார்.

அத்துடன் கறுப்புப் பணத்தை பயன்படுத்தாமல் தேர்தல்களில் ஈடுபட முடியாது என்ற நிலை தற்போது நாட்டில் ஏற்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

## பங்குச் சந்தை ஊழல் பற்றிய விசாரணை முட்டுக்கட்டை?

(டில்லி)

பங்கு சந்தையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஊழல் மோசடிகள் குறித்த பாராளுமன்ற கூட்டுக்கமிட்டியின் விசாரணைகளை குழப்பவும், முட்டுக்கட்டை போடவும் பாரதீய ஜனதாக் கட்சி முயல்கின்றது. இவ்வாறு பிரதமர் நரசிம்மராவ் குற்றம் சுமத்தியுள்ளார்

அவர் மேலும் கூறுகையில்; பாராளுமன்றத்தைக் கலைக்கச் செய்வதன் மூலம் பாராளுமன்ற கூட்டுக்கமிட்டியின் விசாரணைகளை தடுக்கலாம் என்று திட்டமிட்டே தன்மீது ஊழல் குற்றம் சுமத்தப்பட்டிருப்பதாகவும், பாராளுமன்றம் கலைக்கப்பட்டால் ஊழல்பேர்வழிகள் தண்டனையிலிருந்து தப்ப வழி ஏற்படும் என்றும் தெரிவித்தார்.

காங்கிரஸ் கட்சியை ஜனநாயக ரீதியாக வெல்ல முடியாத சக்திகள் அதன் மீது களங்கம் கற்பிக்க முனைந்து செயற்படுவதாகவும் காங்கிரஸ் கட்சியின் மகளிர் அணியினரிடையே பேசுகையில் அவர் மேலும் தெரிவித்தார்.

## பிரதமர் நரசிம்மராவ் உடன் பதவி விலக வேண்டும்

### தேசிய முன்னணி வலியுறுத்து

(டில்லி)

பிரதமர் பி. வி. நரசிம்மராவ் உடனடியாக பதவி விலக வேண்டும் என்று தேசிய முன்னணி மற்றும் இடதுசாரிக் கட்சிகள் கூட்டாக வலியுறுத்தி உள்ளன.

நேற்று முன்தினம் புதுடில்லியில் நடைபெற்ற இக்கட்சிகளின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் அரசாங்கத்தின் தலைவர் மீதே சந்தேகம் கொள்ளும் வகையில் ஊழல் குற்றச்சாட்டு தெரிவிக்கப்பட்டிருப்பது குறித்து ஆழ்ந்த கவலையையும் வெளியிட்டனர்.

## ஐ. நா. பாதுகாப்பு படைகள் வெளியேற நேரிடலாம்

### பொஸ்னியாவிலுள்ள பிரஞ்சு தளபதி

(சரஜிவோ)

சமாதானத்தை ஏற்படுத்தும் தமது முயற்சிகளுக்கு உள்ளூர் தலைவர்கள் ஒத்துழைப்பு வழங்காது விட்டால் தமது துருப்புக்களை வாபஸ் பெற நேரிடும் என்று ஐ. நா. அமைதிபடையின் தளபதியாக பொஸ்னியா சென்றிருக்கும் பிரான்சுத் தளபதி ஜெனரல் பிலிப்பி மொறிலியன் எச்சரித்துள்ளார்.

தலைநகர் சரஜிவோவில் வைத்து உணர்ச்சிமயமான நிலையில் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் அவர் மேலும் கூறுகையில்; பொஸ்னிய மக்கள் தமது அரசியல் மற்றும் இராணுவத் தலைமைகளுக்கு அராஜகத்தை நிறுத்தும்படி அழுத்தம் பிரயோகிக்க வேண்டும் எனவும், உள்ளூர் அமைப்புகள் போரிட தீர்மானித்தால் ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு படையினரால் மட்டும் சமாதானத்தை திணித்துவிட முடியாது என குறிப்பிட்டார்.

அத்துடன் அரசாங்கம் மற்றும் இராணுவத்தில் இருக்கும். சகல தரப்பினரும் ஐ. நா. சபையின் பாதுகாப்பு, படையினருடன் ஒத்துழைக்காது விட்டால் சோகம் சுமந்தபடி ஐ. நா. பாதுகாப்பு படைகள் வெளியேறுவதைத் தவிர வேறு வழியில்லை எனவும் தெரிவித்தார்.

## தென் கொரியா வரும்படி கிளிண்டனுக்கு அழைப்பு

(சியோல்)

அமெரிக்க அதிபர் பில் கிளிண்டன் ஜூலை 10ஆம் 11ஆம் திகதிகளில் தென் கொரியாவுக்கான உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளார் தென் கொரிய ஜனாதிபதி கிம்- யங்- சாம் விடுத்த அழைப்பின்பேரில் விஜயத்தை மேற்கொள்ளும் அமெரிக்க ஜனாதிபதி கிளிண்டன் அங்கு வட கொரியாவிலிருக்கும் அணு ஆயுத உலைகள் பற்றிய முக்கிய பேச்சுக்களை நடத்தக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த பெப்ரவரியில் பதவி யேற்றுக் கொண்ட பின்னர் இரு ஜனாதிபதிகளும் நேரில் சந்திக்க இருப்பது இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

தென் கொரியாவில் நிலை கொண்டிருக்கும் சுமார் 36,000 அமெரிக்க துருப்புக்கள் தொடர்பாகவும் கொரிய அமெரிக்க பாதுகாப்பு உடன்பாடு தொடர்பாகவும் பேச்சுக்கள் இடம்பெறக்கூடும் என்றும் கூறப்படுகிறது.

## சிவில் யுத்த அபாயம்

(பொன்)

ஜேர்மனியில் உள்நாட்டு யுத்தம் கட்டவிழ்த்து விடப்பட முன்னர் அரசு வன்முறைகளை கட்டுப்படுத்த உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஜனாதிபதி ஹெல்மட் கோலின் கூட்டரசாங்க உறுப்பினர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# வீரப்பனைப் பிடிக்க இரண்டு ஹெலிகள் தேவை

## பொலிஸ் அதிகாரி தெரிவிப்பு

தென்னிந்தியாவின் இரு மாநிலங்களின் பொலிசாருக்கு சவாலாக விளங்கிவரும் சந்தன மரக் கடத்தல் வீரப்பனைப்பிடிப்பதற்குத்துப்பாக்கி பொருத்தப்பட்ட ஹெலிக் கொப்டர்கள் பயன்படுத்தப் படவேண்டும் என இந்தியப் பொலிஸ் அதிகாரி தெரிவித் துள்ளார்.

வீரப்பன் குழுவின் கண்ணி வெடித் தாக்குதலின்போது படுகாயமடைந்து சிகிச்சை பெற்றுவரும் கோபாலகிருஷ்ணன் என்ற பொலீஸ் அதிகாரியே இவ்வாறு தெரிவித் துள்ளார்.

கர்நாடக மாநிலத்துக்குக் கொண்டுவரப்பட்ட இந்திய எல்லைக் காவல் பராத் துருப்புக்கள் தமிழ்நாடு மாநிலத்துக்கும், கர்நாடக மாநிலத்துக்கும் இடையிலான காட்டுப் பகுதியில் வீரப்பன் குழுவினரைத் தேடிவருகின்றனர்.

வீரப்பனின் வீடாகவுள்ள காட்டுக்குள் அவரைப் பிடிப்பதென்பது தரைப்படையினரைப் பொறுத்தவரை கஷ்டமான காரியமாக இருக்கும் என அவ்வதிகாரி தெரிவித்தார். இதற்கென குறைந்த பட்சம் இரண்டு ஹெலிக்கொப்டர் கன்ஷிப்களையாவது பயன்படுத்தினால் வீரப்பனின் மறைவிடத்தைக் கண்டு பிடித்துவிடலாம் என அவர் தெரிவித்தார்.

வீரப்பனைப் பிடிப்பதே தனது இலட்சியம் எனப் பொலிஸ் அதிகாரி கோபாலகிருஷ்ணன் மேலும் தெரிவித் துள்ளார்.

## தையல் கண்காட்சி

(தொல்புரம்)

தேசிய சர்வோதய சிரமதான சங்கத்தின் நல்லூர் பிரதேச நிலையத்தினால் தையல் கண்காட்சியும் விற்பனையும் நடாத்தப்படவுள்ளது.

மேற்படி நிலையத்தில் தையல் பயிற்சி பெற்று வெளியேறும் முதலாம் கட்ட மாணவிகளின் தையல் கண்காட்சியினை 24ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.00 மணியளவில் யாழ். தேசிய சர்வோதய மாவட்ட இணைப்பாளர் திரு. பா. செல்வரத்தினம் ஆம்பித்து வைக்கவுள்ளார்.

# புலிகளுடன் பேசியே சமாதானத்தை எட்டலாம்

## கிழக்கு மக்களின் கருத்து இது

(கொழும்பு)

''புலிகளும், அரசாங்கமும் பேச்சுவார்த்தை நடத்துவதன்மூலமே இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணமுடியும். அரசாங்கம் விடுதலைப் புலிகள் தவிர்ந்த ஏனைய பிரதிநிதிகளுடன் பேசுவதால் எந்தவித பயனும் ஏற்படப் போவதில்லை. இதுவே கிழக்கு மாகாண மக்களின் கருத்து'' என சர்வ மதக் குழுவில் அங்கம் வகித்து அண்மையில் கிழக்கு மாகாணம் சென்று வந்த வண. பிதா லோரஸ் ஆனந்த பி. பி. ஸி. க்கு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் ''இலங்கையில் கிழக்கு மாகாண மக்களே மற்றெந்தப் பகுதி மக்களை விடவும் அதிக துன்பம் அனுபவிக்கிறார்கள்'' என தெரிவித்தார்.

## வீரப்பனைபிடிக்க போனோர் மீனவர்மீது துப்பாக்கிச் சூடு

(சென்னை)

வீரப்பன் குழுவைச் சேர்ந்தவர்கள் எனக் கருதி ஆற்றில் மீன் பிடித்துக்கொண்டிருந்த இருவர் மீது கர்நாடக அதிரடிப் படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் அவர்கள் காயமடைந்தனர்.

சேலம் குளத்தூர் அருகில் நேற்றுக்காலை மீன்பிடித்துக் கொண்டிருந்த இருவரும் அப் பகுதியில் வீரப்பன் குழுவினரை தேடிவரும் அதிரடிப் படை பொலிசாரைக் கண்டதும் அச்சம் காரணமாக எழுந்து ஓடினராம். இதனால் இவர்கள் மீது பொலிசார் துப்பாக்கிச்சூடு நடத்தியதில் இருவரும் காலில் காயமடைந்தனர். இவர்கள் இப்போது சேலம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்

நேற்றுமுன்தினமும் தமிழக பொலிசார் வீரப்பன்குழுவைச் சேர்ந்தவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் 13 பேரை கைது செய்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## கனடாவிலிருந்து வந்த 3 தமிழ் இளைஞர்கள் கைது

(கொழும்பு)

கனடாவிலிருந்து கொழும்பு வந்த கிளிநொச்சி இளைஞர் ஒருவர் கொழும்பு கோட்டையில் வைத்து அவரது நண்பர்களுடன் பொலிசாரால் கைது செய்யப்பட்டுத் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

1984 ஆம் ஆண்டு கனடாவுக்குச் சென்ற இவரும், இவரது இரண்டு நண்பர்களும் கனேடியப் பிரஜைகள் எனவும், தமது பெற்றோரைக் கனடாவிற்கு அழைத்துச் செல்லக் கொழும்பு வந்தவர்கள் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இந்த இளைஞர்கள் பற்றிய அறிக்கை தேசியப் புலனாய்வுப் பணியகத்திலிருந்தும், குற்றப்புலனாய்வுப் பணியகத்திலிருந்தும் வந்த பின்னரே விடுவிக்கப்படுவர் எனப் பொலிசார் தெரிவித்தனர்.

## நிர்வாகிகள் தெரிவு

தென்மராட்சி கல்விக் கோட்ட அதிபர் சங்கத்தின் வருடாந்த நிர்வாகசபை தெரிவுக் கூட்டம் சென்ற 10-6-93 ஆம் திகதி யா/ சாவகச்சேரி றிபேக் கல்லூரியில் இடம்பெற்றது.

இதில் தலைவராக ரி. துரைராசா அவர்களும், செயலாளராக ஐ வரதராசா அவர்களும் பொருளாளராக சி. வேலாயுதபிள்ளை அவர்களும்உட்பட 11 பேர் கொண்டநிர்வாகசபைஏகமனதாக தெரிவு செய்யப்பட்டனர். இதில் தென்மராட்சி கோட்ட சகல பாடசாலைஅதிபர்களும் கலந்து கொண்டனர் இக்கூட்டத்தில் நடைமுறைகள் பற்றி தென்மராட்சி கோட்ட கல்விப் பணிப்பாளர் திரு. பொ. வீரபத்திரன் அவர்கள் விளக்கிக் கூறினார். (86)

## தமிழர்களின் கஷ்டங்களை உலகிற்கு தெரிய வைப்பேன்

### நோர்வே திரும்பும் போரூட் பிரதிநிதி

(வடமராட்சி)

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் தமிழ் மக்கள் படும் கஷ்டங்கள், துயரங்கள், துன்பங்களை எனது நோர்வே நாட்டில் மட்டுமல்ல தமிழர் இருக்கின்ற நாடுகள் அனைத்திலும் தெரிய வைப்பேன்.

சிறிலங்காவில் மூன்று வருடங்கள் தனது சேவையை முடித்து நோர்வே நாட்டுக்கு திரும்பிச் செல்லவுள்ள முன்னாள் கொழும்பு வதிவிடப் பிரதிநிதி திரு போல் ஹென்றி கீலன் யாழ்ப்பாணத்திலிருந்து அண்மையில் விடைபெற்றுச் செல்லும் போது பருத்தித்துறை துறைமுகத்தில் வைத்து செய்தியாளருக்கு இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கும் போது, நடந்து முடிந்த மூன்று வருட காலத்தில் தமிழ் மக்கள் பெரும் அனர்த்தங்களுக்கும் ஆபத்துக்களுக்கும் முகம் கொடுத்திருக்கின்றனர்.

இம்மாவட்டத்தில் மேலும் சிறந்த சேவையை செய்ய போக்குவரத்துச் சேவை ஒரு தடைக்கல்லாக இருந்துள்ளது.

கடந்த 26 வருடங்களாக போரூட்நிறுவனத்தின் சேவை இந்த மண்ணில் செயல்பட்டு வருகிறது. மக்களுக்குத்தேவை ஏற்படும் வரை போரூட் நிறுவனத்தின் சேவை இங்கே நீடிக்கும்.

கடந்த மூன்று ஆண்டு காலத்தில் அதி உச்சக்கட்டமானசேவையை போரூட் நிறுவனம் இங்கே மேற்கொண்டது என்றார். (யோ)

## நரசிம்மராவின் சாதனைகள் விளக்கி இன்று நிகழ்ச்சிகள்

(டில்லி)

பிரதமர் நரசிம்மராவ் அரசு ஆட்சிக்கு வந்து இன்றுடன் இரண்டு ஆண்டுகள் பூர்த்தியாகின்றன. இதனையொட்டி காங்கிரஸ் கட்சி தாம் இது வரை சாதித்த சாதனைகளை மக்களுக்கு விபரிக்கும் பலவித நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்துள்ளது.

## கேட்டதிலும் அதிகநிதி சிறிலங்காவிற்கு கிடைத்தது

### ரணில் பெருமிதம்

(பாரிஸ்)

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் இலங்கைக்கு 84 கோடி அமெரிக்க டொலர் நிதியுதவியை வழங்க இணங்கியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகளின் குழுக்கூட்டம் கடந்த வெள்ளி சனி ஆகிய தினங்களில் நடைபெற்றது. அப்போதே இலங்கைக்கான மேற்படி நிதியுதவி அளிக்க முடிவு செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் சென்ற குழு இம்முறை உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் 80 கோடி அமெரிக்கடொலரை நிதியுதவியாக கேட்டிருந்தது. 'இலங்கை அரசு மீதான நம்பிக்கையினாலேயே கூடியளவு நிதியுதவியை வழங்க உதவி நாடுகள் சம்மதித்ததாக பிரதமர் ரணில் பின்னர் தெரிவித்தார்.

## நிவாரண முத்திரைக்கு பழுதடைந்த பூநுவி நியோகம்

### மக்கள் வீசி எறிந்தனர்

[நமது நிருபர்]

இடம்பெயர்தோருக்குப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால் பாவனைக்கு உதவாத பழுதடைந்த பூடு வழங்கப்பட்டதையும், அதனை மக்கள் அங்கேயே வீசிஎறிந்துவிட்டுச் சென்றதையும் நேரில் காண முடிந்தது.

மேற்படிசம்பவம் நேற்றைய தினம் நீர்வேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் உரும்பராய் சந்திக் கிளை 25 இல் இடம்பெற்றது.

இடம் பெயர்ந்தோருக்கான நிவாரண முத்திரைக்குப் பொருள்களை மேற்படி கிளையில் பெற்றுக்கொண்டு வெளியேறிய நடுத்தர வயதுடைய குடும்பஸ்தர் ஒருவரை நமது நிருபர் அணுகி விசாரித்த போது அவர், தமக்கு நிவாரணத்திற்கென வழங்கிய பூடு எனக் கூறி ஒரு பையைக் காட்டினார். அதற்குள் வெறும் சருகுகளாகப் புழுப் பிடித்த நிலையில் பூடுகள் காணப்பட்...

## 60 வீடுகளில்கொள்ளையிட்ட இருவர் கைதாகினர்

வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி, கொள்ளுப்பிட்டிஆகிய பகுதிகளில் உள்ள 60க்கு மேற்பட்ட வீடுகளில் கடந்த இரண்டுவருடகாலமாககொள்ளையிட்டு வந்த இரண்டு நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொள்ளையிட்டதாகச் சந்தேகிக்கப்படும் 15 இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான பெறுமதியுள்ள பொருள்கள் மீட்கப்பட்டன.

பம்பலப்பிட்டியில் வீடொன்றை இவர்கள் கொள்ளையடித்து விட்டு வந்துகொண்டிருந்தபோது இவர்கள் பொலிசாரால் மடக்கிப் பிடிக்கப்பட்டனர். பொலிசார் நடத்திய விசாரணையின் போது 100 டெக்குகள், 10 கமெராக்கள், 30 பவுண் தங்க ஆபரணங்கள் ரொக்கப் பணம் உட்பட பல பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

## லலித்தை சுட பயன்பட்டது செக்கோ. துப்பாக்கியாம்

(கொழும்பு)

லலித் அத்துலத்முதலியை சுட்டுக்கொல்ல பயன்படுத்தப்பட்ட துப்பாக்கி செக்கோஸ்லேவாக்கியாவில் தயாரிக்கப்பட்டு 1984 ஆம் ஆண்டு லெபனானுக்கு விற்கப்பட்டது என குற்றபுலனாய்வுத்துறையினர் கண்டறிந்துள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## பொலிஸ் அதிகாரி வீட்டில்

# விஜயதுங்கா ஆட்சியில் பல சிறந்த மாற்றங்கள்

## காமினி திஸநாயக்கா தெரிவிப்பு

(கண்டி)

வடக்கு. கிழக்குப் பிரச்சினைக்கு ஜனநாயகரீதியிலேயே தீர்வுகாணப்படல் வேண்டும். அனைத்துக் கட்சிகளுக்கிடையிலும் இதற்கான சுமுகப் பேச்சுவார்த்தைகளின் மூலம் இணக்கமான உடன்பாடு ஒன்றினைக் காணவும் வேண்டும் என ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி தலைவரான திரு. காமினி திஸநாயகா தெரிவித் துள்ளார்.

கண்டி ஹோட்டல் டூர் மன்... கப்பட உள்ளது. இப்படியாக பல மாற்றங்கள் இடம் பெறுவதை நாம் இப்பொழுது காண்கிறோம்.

நாம் அப்போதைய தனிநபர் அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைக்கு எதிராக எமது போராட்டத்தைத் தொடங்கினோம். ஆனால் அது கட்சிக்கு எதிராக தொடங்கப்பட்ட போராட்டமல்ல. யார், எவர் எதைக் கூறிய போதிலும் கூட நாடு இன்... வேண்டும். ஜனநாயகம் போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டுமாயின் இவ்வாறான சகல கட்சிகளுக்கு மத்தியிலும் ஒருங்கிணைந்த பேச்சுவார்த்தைகள் அவசியம்.

நாட்டில் இன்று வறுமையில் வாடுவோர் பலர். தொழில் இன்றி திண்டாடுவோர் ஏராளம். ரஞ்சன், டென்ஸில், லலித் போன்ற பெறுமதி மிக்க மனிதர்கள் கொல்லப்...

## 1700 பீப்பா

...கத்தினரின் 35 ஆயிரம் மீன் பிடி வலைகளும். ஏழு லொறி ...

செய்தியாளருக்கு இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கும் போது, நடந்து முடிந்த மூன்று

காலத்தில் அதி உச்சக்கட்ட மானசேவையை போருட் நிறுவனம் இங்கே மேற்கொண்டது என்றார். (யோ)

## நிவாரண முத்திரைக்கு பழுதடைந்த பூநுவி நியோகம்

### மக்கள் வீசி எறிந்தனர்

[நமது நிருபர்]

இடம்பெயர்தோருக்குப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால் பாவனைக்கு உதவாத பழுதடைந்த பூடு வழங்கப்பட்டதையும், அதனை மக்கள் அங்கேயே வீசிஎறிந்துவிட்டுச் சென்றதையும் நேரில் காண முடிந்தது.

மேற்படிசம்பவம் நேற்றைய தினம் நீர்வேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் உரும்பராய் சந்திக் கிளை 25 இல் இடம்பெற்றது.

இடம் பெயர்ந்தோருக்கான நிவாரண முத்திரைக்குப் பொருள்களை மேற்படி கிளையில் பெற்றுக்கொண்டு வெளியேறிய நடுத்தர வயதுடைய குடும்பஸ்தர் ஒருவரை நமது நிருபர் அணுகி விசாரித்த போது அவர், தமக்கு நிவாரணத்திற்கென வழங்கிய பூடு எனக் கூறி ஒரு பையைக் காட்டினார். அதற்குள் வெறும் சருகுகளாகப் புழுப் பிடித்த நிலையில் பூடுகள் காணப்பட்டன. அவற்றை நிலத்திலே கொட்டிப் பார்த்தபோது 5 கிராம் பூடுகூடப் பயன்படுத்தக்கூடியதாக இருக்கவில்லை. அவரது சிட்டையை வாங்கிப் பார்த்தபோது அதில் 500 கிராம் பூடு 38 ரூபா எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. அதைக் காண்பித்த அக்குடும்பஸ்தர் இதனை வீட்டுக்குக் கொண்டுசென்று என்ன செய்வது என வேதனையுடன் கூறிவிட்டு அதனை வீதியிலேயே வீசிவிட்டுச் சென்றார். இது போன்றே பலரும் தத்தமக்கு வழங்கப்பட்டதை எறிந்துவிட்டுச் சென்றனர்.

இதுதொடர்பாக மக்கள் அக்கிளையின் முகாமையாளரிடம் சென்று புகார்செய்த போது அவர், நிவாரணத்திற்கு வழங்குமாறு தமக்கு தமதுசங்கம்வழங்கிய பொருள்களையே தாம் நிவாரணமுத்திரைக்கு வழங்குவதாகப் பதிலளித்தாராம்.

---

1700 பீப்பா

கத்தினரின் 35 ஆயிரம் மீன்பிடி வலைகளும், ஏழு லொறி கொண்ட சைக்கிள் உதிரிப் பாகங்களும், யாழ். மாநகர சபைக்கு சுமார் 50 சைக்கிள்களும், மற்றும் கண்ணாடிப் பொருள்களும், றெட்பார்னா நிறுவனத்திற்கு ஆறு தெளிகருவிகள், ஒரு ஜெனரேற்றரும் மற்றும் தனியாருக்கான பல பொருள்களும் இக் கப்பலில் வந்துள்ளன. (யோ)

---

லெப். மருதவாணன்

களுடன் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு புதைகுழியில் விதைக்கப்படும்.

லெப். மருதவாணனுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

---

கல்லீரல்

வெளியிட்டுள்ளது. இதன்படி சீனாவில் 2 இலட்சத்து 88 ஆயிரத்து 286 பேரும், அவுஸ்திரேலியாவில் 3ஆயிரத்து 652 பேரும், நியூஸிலாந்தில் 242 பேரும், சிங்கப்பூரில் சுமார் 200 பேரும், இந்நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக அக்கணக்கில் காட்டப்பட்டுள்ளது.

இந்நோய் வந்த பின்னர் குணப்படுத்துவதைப் பார்க்கிலும் ஏனைய உயிர்க் கொல்லி நோய்களான அம்மை, கயரோகம் போன்றவற்றின் பரவலைத் தடுக்க மேற் கொள்ளப்படுவதைப் போன்று வருமுன் காக்கும் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதையே ஐ.நா. அமைப்பான உலக சுகாதார நிறுவனம் விரும்புகிறது.

இதற்கான புதிய ஊசி மருந்து இப்பொழுது தயாரிக்கப்பட்டுள்ளது. 1997க்கு முன்னர் உலகளாவிய நிலையில் இவ்வூசி மருந்துகள் கொடுக்கப்பட வேண்டும் என்று இவ்வமைப்பு சிபார்சு செய்துள்ளது.

---

## இருவர் கைதாகினர்

வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி, கொள்ளுப்பிட்டி ஆகிய பகுதிகளில் உள்ள 60க்கு மேற்பட்ட வீடுகளில் கடந்த இரண்டுவருடகாலமாககொள்ளையிட்டு வந்த இரண்டு நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொள்ளையிட்டதாகச் சந்தேகிக்கப்படும் 15 இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான பெறுமதியுள்ள பொருள்கள் மீட்கப்பட்டன.

பம்பலப்பிட்டியில் வீடொன்றை இவர்கள் கொள்ளையடித்து விட்டு வந்துகொண்டிருந்தபோது இவர்கள் பொலிசாரால் மடக்கிப் பிடிக்கப்பட்டனர். பொலிசார் நடத்திய விசாரணையின் போது 100 டெக்குகள், 10 கமெராக்கள், 30 பவுண் தங்க ஆபரணங்கள் ரொக்கப் பணம் உட்பட பல பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

## லலித்தை சுட பயன்பட்டது செக்கோ. துப்பாக்கியாம்

(கொழும்பு)

லலித் அத்துலத்முதலியை சுட்டுக்கொல்ல பயன்படுத்தப்பட்ட துப்பாக்கி செக்கோஸ்லேவாக்கியாவில் தயாரிக்கப்பட்டு 1984 ஆம் ஆண்டு லெபனானுக்கு விற்கப்பட்டது என குற்றபுலனாய்வுத்துறையினர் கண்டறிந்துள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## பொலிஸ் அதிகாரி வீட்டில் பெருமளவு கஞ்சா மீட்பு

சிறிலங்கா பொலிஸ் தலைமையகத்தில் கடமையாற்றும் சப் இன்ஸ்பெக்டர் ஒருவரின் நாவல வீட்டிலிருந்து டலலட்ச ரூபா பெறுமதியான கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது,

மிரிஹான பொலிசாருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து குறிப்பிட்ட பொலிசாரின் வீட்டைத் திடீரென முற்றுகையிட்ட விசேட விசாரணைப் பிரிவு பொலிசார் அங்கிருந்து பல லட்ச ரூபா பெறுமதியான கஞ்சாவைக் கைப்பற்றியுள்ளனர்.

சம்பந்தப்பட்ட சப் இன்ஸ்பெக்டர் தலைமறைவாகியுள்ளார். அவரின் மனைவியும், சகோதரியும் மேல் விசாரணைக்காக பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## தனியார்கல்வி நிலையத்தின் மாணவன்மீது சுத்தியல்அடி

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரிலுள்ள தனியார் கல்விநிலையம்ஒன்றில்கல்விகற்கும் மாணவன் ஒருவர் மீது மேற்படி கல்வி நிலைய நிர்வாகத்தைச் சேர்ந்தவர்கள் சுத்தியலால் தாக்கிய சம்பவம் நேற்றுநடைபெற்றுள்ளதாகத் தெரியவருகின்றது.

உயர்வகுப்பு மாணவன் மீது நடாத்தப்பட்ட இத் தாக்குதல் காரணமாக இம் மாணவன் காயமடைந்துள்ளார்.

கல்வி நிலையத்துக்கு செலுத்த வேண்டிய ஒரு மாதத்துக்குரிய கட்டணத்தைச் செலுத்தாமைக்காகவே இம் மாணவன் மீது தாக்குதல் நடாத்தப்பட்டதாக கூறப்பட்டது.

இம்மாணவன் ஏற்கனவே செலுத்திய மாதக்கட்டணங்கள்கூட செலுத்தப்படவில்லையென்று கல்வி நிலைய நிர்வாகத்தினர் கூறி இத்தாக்குதலை நியாயப்படுத்தியதாகத் தெரியவருகின்றது.

இச்சம்பவம் தொடர்பாக தமிழீழக் காவல்துறையினர் விசாரணை நடாத்தி வருகின்றனர்

---

தமிழர் கொழும்பு செல்வதைத்தடுக்க

## வவுனியா நகரில் பாஸ்போட் கருமபீடம்

(கொழும்பு)

வடபகுதி மக்கள் கொழும்புக்குச் செல்வதைக் குறைப்பதற்காக வவுனியாவில் கடவுச் சீட்டு வழங்கும் அலுவலகம் ஒன்று கடந்த புதன்கிழமை முதல் இயங்க ஆரம்பித்துள்ளது. இதற்கென வவுனியா பிரதேச செயலகம் வவுனியா தெற்கு பிரதேச செயலகம், வெங்கலச் செட்டிக்குளம் பிரதேசச் செயலகம் ஆகிய இடங்களில் கருமபீடங்கள் திறக்கப்பட்டுள்ளன.

இதேவேளை கொழும்பில் உள்ள குடிவரவு குடியகல்வு அலுவலகத்தில் நாளொன்றுக்கு 1500 கடவுச் சீட்டுக்களுக்கான விண்ணப்பங்கள் கிடைப்பதாகவும் இவற்றில் 1000 கடவுச் சீட்டுக்களுக்கான விண்ணப்பங்கள் வடபகுதியைச்சேர்ந்தவை எனவும் சொல்லப்படுகிறது.

இதேவேளை வவுனியா நகரில் தங்குவதற்கும் பல கெடுபிடிகள் மேற்கொள்ளப்பட்டு வருவது தெரிந்ததே.

---

125 சிங்கள

பங்கள் இராணுவ முகாம்களுக்கு அருகே இதுவரை வசித்துவந்தன. ஏனையவர்கள் தமது சொந்த இடமான தென்னிலங்கைக்கு சென்றுவிட்டிருந்தனர். இவர்களே இப்போது மீளவும் கல்குடாவில்குடியேற்றப்பட்டுள்ளனர்.

---

## ‘சமூக ஒளி’ வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக சமூக விஞ்ஞான மன்றத்தின் பருவகால சஞ்சிகையான ''சமூக ஒளி'' இன்று திங்கட்கிழமை வெளியிடப்படவுள்ளது.

மாலை 3.00 மணியளவில் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இச்சஞ்சிகையின் வெளியீட்டு விழா நடைபெற உள்ளது.

---

விளக்கிக் கூறினார். (86)

# விஜயதுங்கா ஆட்சியில் பல சிறந்த மாற்றங்கள்

## காமினி திஸநாயக்கா தெரிவிப்பு

[கண்டி]

வடக்கு. கிழக்குப் பிரச்சினைக்கு ஜனநாயகரீதியிலேயே தீர்வுகாணப்படல் வேண்டும். அனைத்துக் கட்சிகளுக்கிடையிலும் இதற்கான சுமுகப் பேச்சுவார்த்தைகளின் மூலம் இணக்கமான உடன்பாடு ஒன்றினைக் காணவும் வேண்டும் என ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி தலைவரான திரு. காமினி திஸநாயகா தெரிவித்துள்ளார்.

கண்டி ஹோட்டல் டூர் மன்வின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாடொன்றிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். திரு காமினி அங்கு தொடர்ந்து கூறியதாவது:

கடந்த காலங்களில் இந்நாட்டில் ஒரே போராட்டகரமான அரசியல் இயக்கப்பாடுகளே நிலவி வந்தன. இதன் மூலம் பல தரப்பட்ட வாதபேதங்களும் உருவாகின. இவை நாட்டின் அரசியல் சீர்கேடுகளுக்கும் உரமூட்டுவதாகவும் அமைந்தன. இன்றைய காலகட்டம் மிக்கபெறுமதியானது. ஏனென்றால் பிரதேசஅபிவிருத்தி தொடர்பாக நாம் எல்லோரும் ஐக்கியப்பட வேண்டியுள்ளது. அவ்வாறானபொழுதுநாட்டின் நலனும் பேணப்படும் அதனூடாக அமைதியும் ஏற்படும்

நாம் ஒன்றுபட வேண்டிய அரசியல் சூழ்நிலையும் இன்று உருவாகியுள்ளதால் அரசியலிலும் அதிகாரப் பரவல் அவசியம் வடக்கு - கிழக்கு பிரச்சினைக்கும் இத்தகைய மாற்றம் உதவும் முன்னாள்ஜனாதிபதி பிரேமதாசாவின் மரணமும் எமது கட்சியின் தலைவர் லலித்தின் மரணமும் எமது கட்சிக்குப் பெரும் இழப்பை ஏற்படுத்திவிட்டன.

மறைந்த ஜனாதிபதி பிரேமதாசாவின் மறைவின் பின் நாட்டில் பல மாற்றங்கள் இடம்பெற்று வருவதைக் காண்கிறோம்.

இன்றைய ஜனாதிபதி திரு. டி.பி விஜயதுங்கா முடக்கி வைக்கப்பட்ட அதிகாரங்களை அமைச்சர்களுக்கு வழங்கியுள்ளார். சட்டவிரோதமாக உருவாகப்பட்ட இரகசியப் பொலிஸ் படைப் பிரிவுகள் கலைக்கப்பட்டுவிட்டன. ''ஸ்ரீ'' மத் என்றபதம் பிரயோகிக்கப்படுவதில்லை. அரண்மனை சிம்மாசனம் அகற்றப்பட்டுவிட்டது. ஜனாதிபதியின் அதிகாரங்கள் பற்றிய விவகாரம் புனரமைக்கப்பட உள்ளது. இப்படியாக பல மாற்றங்கள் இடம் பெறுவதை நாம் இப்பொழுது காண்கிறோம்.

நாம் அப்போதைய தனிநபர் அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைக்கு எதிராக எமது போராட்டத்தைத் தொடங்கினோம். ஆனால் அது கட்சிக்கு எதிராக தொடங்கப்பட்ட போராட்டமல்ல. யார், எவர் எதைக் கூறிய போதிலும் கூட நாடு இன்றுள்ள சூழ்நிலையில் அபிவிருத்தி ஏற்பட்டே ஆகவேண்டும்.

தமிழ்ப் பிரச்சினையை ஜனநாயக ரீதியில் எல்லாக் கட்சிகளினதும் சுமுகப் பேச்சுவார்த்தைகள் மூலமே தீர்க்கப்பட வேண்டும். ஜனநாயகம் போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டுமாயின் இவ்வாறான சகல கட்சிகளுக்கு மத்தியிலும் ஒருங்கிணைந்த பேச்சுவார்த்தைகள் அவசியம்.

நாட்டில் இன்று வறுமையில் வாடுவோர் பலர். தொழில் இன்றி திண்டாடுவோர் ஏராளம். ரஞ்சன், டென்ஸில், லலித் போன்ற பெறுமதிமிக்க மனிதர்கள் கொல்லப்பட்டு விட்டனர். மனித உயிர்கள் நாளுக்கு நாள் பலியாகின்றன. இவற்றை உணர்ந்தாவது நாம் தொழில்பட வேண்டிய அவசியமும் அவசரமும் ஏற்பட்டுள்ளது என்றார்.

## பத்திரிகை மீது வழக்கு; உடுகம்பொல மீது இல்லை

[கொழும்பு]

முன்னாள் பொலிஸ்மா அதிபர் பிரேமதாச உடுகம்பொல தலைமறைவாகி இருந்த வேளை அவரின் சத்தியக்கடதாசியைப் பிரசுரித்த பத்திரிகை மீது வழக்கு விசாரணை நடைபெறுகிறது ஆனால் அதனை வெளியிட்ட உடுகம்பொல மீது வழக்கு எதுவும் இல்லையெனவிஜஎத்திகொட தெரிவித்தார்.

அவர் தலைமறைவாக இருந்தவேளை அவரது செய்தியை வெளியிடமறுத்த பத்திரிகைகள் இன்று அவரின் செய்தியை முன் பக்கத்தில் வெளியிட்டன. அவரின் சத்தியக் கடதாசியைப்பிரசுரித்த பத்திரிகைமீது வழக்குத் தாக்கல்செய்யப்பட்டால் உடுகம்பொல மீதும் தொடர்ந்து விசாரணை நடைபெறவேண்டும் என விஜஎத்திகொட மேலும் தெரிவித்தார்.

---

## தப்பியோடியோர் கைது

வடக்கு கிழக்கு இராணுவ முகாமிலிருந்து சொல்லாமல் கொள்ளாமல் தப்பியோடி தலைமறைவாகி திரிந்த ஒன்பது சிப்பாய்களை பொலிசார் கைது செய்துள்ளனர். இரவு வீதித்தடைபோட்டுசோதனை மேற்கொண்டபோதே மாத்தளையில் இவர்கள் அகப்பட்டுக் கொண்டனர்.

---

## மரண அறிவித்தல்

### சபாரத்தினக்குருக்கள் வரதராசக் குருக்கள்

துன்னாலை வடக்கு, கரவெட்டி

20-06-93 நேற்று காலமானார். அன்னார் செந்தில் நாதக்குருக்கள் குருஜயா (முள்ளியவளை), சடாநந்தக் குரு [செக்கடித்தெரு, கதிரேசன் கோவில்] அமிர்தாம்பிகை (தென்னாபிரிக்கா), ஆகியோரது சகோதரரும், கோமதி அம்மாவின் கணவரும், வரதா- போசன் (ஜேர்மனி), ரூபி ஆகியோரின் தந்தையுமாவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் 21-6-93 திங்கட்கிழமை [இன்று] அவரது இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

[5189] செந்தில்நாதக் குருக்கள்

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993-ம் ஆண்டு ஜூன் மாதம் 21-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.